ஜோதிஷம்

V1. No. 20 17 My 1928

உ

ஜL
ஜ211, N28 KN
N28.1.20.
189003.

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 8 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928௵ மே௴ 17௳ [No. 20.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 NOV 1928
MADRAS

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	381
2.	காந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L.	383
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L.	387
4.	இலக்கிய எற்ற ஆராய்ச்சி E. T. சொக்கம்மாள் B. A. L. T.	389
5.	தமிழ்ப் பாடம்	391
6.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L.	394
7.	வானசாஸ்திரம்	396
8.	வர்த்தமானம்	399

கலா நிலயம்.

கோழி கொழுத்தால் முட்டை யிடாது.

கிராம வாசிகளின் நல்வாழ்வே ஒரு நாட்டின் சிறப்பிற்கு உயிர்நிலையாய் அமைந்துள்ளதெனும் உணர்ச்சி இக்காலம் நம் தேசமெங்கும் எழுந்துலவுகின்றது. சென்ற ஞாயிற்றுக் கிழமை, சென்னையில் தீனபந்து C. F. ஆண்ட்ரூஸ் அவர்களும், டாக்டர். பெஸண்ட் அம்மையாரும் கிராமச் சீர்திருத்தத்தின் அவசியத்தைப் பற்றியும் அதனை அவர் ஆற்றுகின்ற முறைகளைப் பற்றியும் கோகலே மண்டபத்தில் விரிவாகப் பேசினர். இவ்வுரைகளையும், மற்றவர் இதுபற்றிக் கொண்டிருக்கும் கருத்தினையும், கிராமங்களைச் செப்பனிடுவதாக நினைத்த சில நிகழ்ச்சிகளையும் சிறிது காலமாக உற்று ஆராய்ந்து வந்தோம். அவை யாவும் போகு நெறியாதென்றேனும், குறித்த இடம் எதுவென்றேனும் எமக்குச் செவ்விதின் விளங்கவில்லை. பட்டினத்தைக் கிராமத்திலிருந்து நம் நினைவில் பிரித்துக் கொண்டு, இப்பின்னதற்கே சிறப்பாய்ப் பொருந்திய சீர்திருத்தங்கள் எத்தகையன! ஈரிடத்தும் இருப்பவர் மாந்தரே. திருத்துதற்குரிய குறைகளேதேனும் உளவாயின் அவை பட்டினத்திற்கும் கிராமத்திற்கும், மற்று மாந்தர் உறைகின்ற எவ்விடத்திற்குமே பொது வகையில் பொருந்தக்கூடியனவா யிருத்தலொன்றே இயற்கை. பட்டினங்களி லிருக்கின்ற அளவு படுகொலை கெடுமோசம் பெருகோப் அறியாமை சுயநயம் வீண்செலவு பணச்செருக்கு வறுமை கொடுக்காத கடன் முதலிய வைபவங்கள் கிராமத்தில் இன்றைக்குங்கூட இல்லை என்னும் குறைதவிர எவ்விதச் சீர்திருத்தத்திற்கு அது தனி வகையில் பாத்திரமா யிருக்கின்றதென்று வலித்துரை முயலுங்கால் இக்காலச் சீர்திருத்தஇயக்கங்களிலெல்லாம் பொதுவாய ஓர் வியப்பு யாவரும் எய்துவர்.

சென்ற வருடம் கிராமவாசிகளின் அறிவுவளர்ச்சிக்கென்று சென்னையில் ஒரு காட்சிச்சாலை (Rural Welfare Exhibition) வைத்துப் பல பெரியோர் நடத்தினர். உள்நுழைந்ததும் "கோழி கொழுத்தால் முட்டை யிடாது" என்றோர் அறிவுரை பெரிய எழுத்தில் அட்டையில் வரையப்பெற்று விளங்கியது. இந்தச் சூத்திரத்திற்கு உயிருள்ள உதாரணங்களாக கொழுத்த கோழியொன்றும் இளைத்த கோழியொன்றும் அதன்கீழ் கட்டப்பட்டிருந்தன. பெரியவும் சிறியவுமாய சில முட்டைகளையும் பக்கத்தில் வைத்திருந்தனர். அவைகளுள், பெரிய முட்டையை இளைத்த கோழியும் சிறிய முட்டையைப் பருத்த கோழியுமே இட்டனவென்று அங்கிருந்த கோழிச் சாஸ்திர நிபுணர் சாற்றுவதை நம்புவோம். கோழி கொழுத்தால் முட்டையிடாது? இடவேண்டாமே; யாருக்கு நஷ்டம்? உனக்கோ கோழிக்கோ? இந்தக் கோழிப்புலவரைக் கடந்து அப்பால் சென்றால் அங்கோர் தேனீவேடர் இருந்தார். அவர் பொய்க்கூடு கட்டித் தேனீக்களை வஞ்சித் தழைத்து அப்பேதைச் சந்துக்கள் தேனைக் கொண்டுவந்து கட்டுமாறு செய்து பிறகு அதனைப் பிழிந்து எடுத்துக்கொள்வதற்குத் தன் சூழ்ச்சியால் புதியதாய்க் கண்டுபிடித்த சில சாதனங்களை அளவில் ஆர்வத்தோடு விளக்கிக் கொண்டிருந்தார்.

ஐயோ பாவம், பேதைத் தேனீ! இவ்விதக் காட்சிச் சாலையைத் திறந்து வைத்தவரும் நடத்தி வைத்தவர்களும் சாமானியமானவர்க ளல்லர். நாட்டின் நன்மையைக் கருதிப் பலவகைகளில் முன்னிற்கும் பிரமுகர்கள்.

தற்காலம் எத்தனைபேர் எத்தனை எத்தனை வகைகளில் எத்தனை எத்தனை துறைகளில் சீர்திருத்தங்கள் செய்துவைக்க முயல்கின்றனர் என்னும் கணக்கைக்கடந்த இச்செய்தியை நாமிங்கு எண்ணிக்காட்ட வேண்டுவதில்லை. ஆனால் அரசியல் முதல் கோழிமுட்டை ஈறாக எல்லாச் சீர்திருத்த இயக்கங்களிலும் முக்கியமானதொன்று தெரிவதற்கருமையா யிருக்கின்றது. இத்திருத்தங்களால் எய்தநினைக்கும் முடிவு அல்லது நிலை யாதெனத் தெரியாமலே அவை இயங்குகின்றன என்று நாம் கூறினால் பலர் திகைப்பர். அது இயற்கையே! எனினும் மேல்நோக்காகப் பார்ப்பதற்கு முடிவும் கருத்தும் உள்ளனபோல் தோன்றினாலும் ஆழ்ந்து ஆராயுமிடத்து இவ்வியக்கங்கள் யாவும் அடிமுடி தேடியும் அகப்படா வகையில் முக்கண் அண்ணலையே ஒக்கு மென்னலாம். இவ்வியக்கங்களை முன்னின்று நடத்தி வைக்குந் தலைவர் கருத்தில்லாக் கருமங்கள் செய்கின்றனர் என்று யாம் சொல்லவரவில்லை. அவர் அவ்வவ்வியக்கங்களால் அவ்வப்போது அடுத்துப் பெறுவதற்கிருக்கும் பயன்கள் இவை என்று காட்டுகின்றனர்களே யொழிய அந்நலங்களால் விளைவதற்குரிய மூலமாயும் நிரந்தரமாயும் நிற்கின்ற நலம் எதுவெனப் பொதுவாய்ச் செப்புகின்றதில்லை. ஆட்டிவைத்தபடி ஆடுகின்ற மாந்தருக்குக் கருத்தையும் காட்டிவைத்தால் காணாரோ!

வறுமையென்றும் கல்லாமையென்றும் நோயென்றும் பல தீமைகளைக் கண்ணிற்கண்ட பெரியோர் அவைகளுக்கு ஆற்றாது ஒழிக்கவேண்டுமெனும் தூய சிந்தையோடு முன்வந்து தம் நலம் மறுத்து உழைக்கின்ற அருமை சிறிதன்று. ஜனசமூக வாழ்க்கையில் தோன்றும் தீமையை ஒருவன் நோயுற்ற நிலைக்குச் சமானமாகக் கொள்ளலாம். நோயாளிக்குச் சிகிச்சை செய்யும் வைத்தியனுக்கு நிகராகப் பொதுஜன வாழ்க்கைக்குச் சீர்திருத்தத் தலைவர் அமைகின்றனர். ஆனால், இரணவைத்தியனுக்கு, பிணிதீர்ந்தபின் அடையும் நிலை எத்தகையதெனும் சந்தேகம் இல்லை. ஒரு கை வீங்கிப்போயிற்றென்று வைத்துக்கொள்வோம். அந்த வீக்கத்திற்குக் காரணம் அவனுக்குச் செவ்விதாய்த் தெரிந்தாலும் தெரியாமற்போனாலும், அதற்கு மருந்து தகுந்தபடி அவன் கொடுத்தாலும் கொடுக்காமற் போனாலும், வீக்கம் வடிந்தபின் அக்கை எந்த அளவிற்கு வரவேண்டுமென்பதைப்பற்றி அவனுக்குச் சிறிதேனு மைய முண்டோ? வைத்தியர் நால்வர் நான்குவித நோயிதுவென்று வேறு வேறாக் கூறுவர், உண்மையே. மருந்து முறையிலும் மாறுபடுவர். எனினும் நோயுற்ற நன்னிலை எது வென்று அவர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்படாது. வீங்கிய கையின் வீக்கத்தை வீக்கமென்றுணராமல் மற்றக் கைதான் இளைத்திருக்கிறதென்று சொல்லார். வைத்திய உற்சாகத்தினால் நல்ல கையையும் நோயற்ற கையினளவிற்கு வீங்கும்படி செய்யார். ஏனெனில் வைத்தியத்தினால் அடைவிக்கவேண்டிய ஆரோக்கிய நிலையைப்பற்றிச் சந்தேகம் ஏற்படுவதற்கு நியாயமில்லை.

இரண வைத்தியனின் செய்தி இதுவாகப், பொதுஜன வைத்தியரின் செய்கை இதற்கு மாறாயிருக்கின்றதென்று ஊகிக்கச் சிறிதே சிந்தனை வேண்டும். அரசியல் முறை வர்த்தகமுறை விவாகமுறை ஜாதி முறை சட்ட முறை வோட்டு முறை கல்வி முறை நடையுடை பாவனைகளின் முறை உணவு முறை வழக்குமுறை மாதர்முறை இவைபோன்ற முறைகள் கணக்கில திருத்துதற்கு முயல்வோர், அவர் எண்ணியது எண்ணியபடியே திருத்தியபின் எந்த நிலை ஜனசமூகம் எய்திவிடும் என்று மதித்துளார்? “ஒட்டுரிமை இல்லாத படியாற்றான் இப்படி இருக்கின்றோம்,” “கட்டாயக் கல்வி பயிலாதபடியாற்றான் இப்படி இருக்கின்றோம்” “தீண்டாமை தொலையாதபடியாற்றான் இப்படி இருக்கின்றோம்,” என்று சொல்லும்போதெல்லாம் இப்படி இப்படி என்று இருக்கின்ற தீமையே தெளிவாகின்றது. இவைகளிலும் எது எது எவ்வளவு தூரம் தீமை என்பதைப் பற்றிய மாறுபாடு நேரலாமெனினும் பொதுவிலே அவை நோய்நிலையே என யாவரும் கொள்வர். ஆனால் இந்தத் தீமைகள் திருந்தியபின் எப்படி ஆகவேண்டும் என்ற முடிவாய நோக்கங்கொண்டவர் எத்தனை பேர்? ஜனசமூகத்தின் ஆரோக்கியநிலை இன்னவகை இன்னவகை இருக்கும் என்பதை நினைத்துக்கொண்டு விவகரிப்போர்களும் தம்முள் மாறுபடாமல் இருக்க முடியவில்லை. ஒட்டுரிமை இல்லாதபடியால் இப்படி இருக்கின்றோமென்றால், அவ்வுரிமை பெற்றாலும் அப்படியே இருக்கமாட்டோம் என்பது என்ன நிச்சயம். பெற்றவர்கள் எப்படி இருக்கின்றார்கள்? அந்தநிலை வேண்டுமோ! வீங்கிய கையைப் பார்த்து மற்றைய கைதான் இளைத்ததென்று பருக்கவைக்கும் சூழ்ச்சி யிது. அன்றென மனச்சாக்ஷிக்குச் சம்மதமாய்த் தெரிந்து சொல்ல வல்லார் எங்குளர். கட்டாயக் கல்வி இல்லாததால் இப்படி யிருக்கின்ற நாம், இருந்தால் எப்படியாவோம். ஒவ்வொரு சீர்திருத்த இயக்கங்களையும் இக்கேள்விக்கு உட்படுத்திச் சோதித்துப் பார்த்தால் என்ன விடை கிடைக்கும்!

கிடைப்பதற்குரிய விடையும் ஒன்று இருக்கின்றது. ஆனால் அதை யாவரும் சொல்ல அஞ்சுவர். சீர்திருத்த இயக்கங்களிலெல்லாம் உள்ளுறைந்த நோக்கமாக ஊடாடுவது ஐரோப்பிய அமெரிக்கா நாடுகள் அடைந்த நிலை அடையவேண்டுமென்பதே. ஆனால், அதுதான் ஆரோக்கிய ஸ்திதியோ வென்று எதிர் கேட்டால் ‘ஆம்’ என்பதற்கு வாயில்லை யாதலால் இவ்வியக்கங்கள் ‘இல்லை இல்லை’ என்று எண்ணித் தம்மையே தாம் வஞ்சித்துக் கொள்கின்றன. அந்நிலையு மன்றெனில் மற்றெந் நிலைதான் நோக்கமாக ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி யுழல்கின்றோம்.

எச்செயற்கும் அதன் கருத்தே உயிர் ஆதலால் இவ்வியக்கங்கள் அதுவின்றி நிறைவேற மாட்டோ மென்கின்றன. செயலும் திருத்தமும் புறத்த. அகத்திற்கியன்ற நோக்கத்தைக், காலிற் படி மண்ணெல்லாம் பொன்னென்றெண்ணாதே. நெடுந்தூரம் செலுத்தி வானத்தி லொளிரும் விண்மீனைக் குறிகொள்வோமாயின் உய்யலாம். கோழிகள்பாவம் அதற்கிஷ்டமான முட்டையை இட்டுக்கொள்ளட்டும்.

காந்திமதி என்னும்
காந்தாரநாட்டுக் கட்டழகி.

(365-வது பக்கத் தொடர்ச்சி)

17. ஈமத்தீயும் ஓமத்தீயும்.

இரதிபௌர்ணிமி தினத்திற்கு முன்னிரவுமுதல் பின்னிரவுவரையில் இரத்தினபுரியின்கண் உயர்ந்தோர்மாட்டும் தாழ்ந்தோர்மாட்டும் நடந்த நிகழ்ச்சிகளும் சூழ்ச்சிகளும் இன்னவாறாக, உயிரனைய புத்திரனைப் பிரிந்துழன்ற மன்னவற்கும், தேவதாரரது மாளிகையின் எயில்சூழச் சிறைவதிந்த கோமகற்கும், தன் காதலைக் கொடுத்தலுமின்றி மறுத்தலுமின்றி வச்சையன்போல் காந்திமதி யாட்டிவைக்கும் ஊசலிடை உருண்டுபுரண்ட கலாநாதற்கும், பேரிற்கிணங்கப் பெருங்குன்றம் போயகன்ற கந்தனுக்கும், மாதம் மூன்றிரண்டு மெள்ளமெள்ளத் தேய்ந்தன. கலாநாதன் நாடோறும் காந்திமதியை மனையகத்தேனும் நந்தனவனத்தேனும் சந்தித்துத் தன் மனத்துள் படு மவத்தையெல்லாம் எடுத்தோதி மணம் வேண்டி இரப்பான். “என்மார்பகத்துக் குடிபுகுந்த காந்தி, அங்கு அலைபெருகும் காதல் கடற்கு இன்னும் கரைகண்டிலையோ, நம் மணவினை முடியும் திருநாள் எந்நாளென மொழியாயோ?” என்பான். அவள், நெஞ்சம்போல் வாயினுள் உறைந்த மொழியினளாய், “நாளைத் தருவேன் இதற்குத்தரம், இன்றுவிடுக இதனை,” எனப் புகன் றகல்வாள். கூறியது கூறலெனும் குற்றம் காதலர்பால் மிகுந்துளது, ஆதலால் எல்லையிற் பற்பகல் இவனிவ்வாறு கேட்பதும் அவளவ்வாறு அகல்வதுமாய்க் கழிந்தன. கலாநாதன் காதல்பிரசங்கம் பழகும்போதெல்லாம் அவனுக்குக் கையேடு வாசிப்பவர் கருணாகரர். அவர் அடியெடுத்துத் தருவதன்றித் தொடர் கூட்டியும் தந்தபோதிலும் கம்பியனுக்குச் சொல்வன்மையில்லாததாலோ காந்திக்கு உளம் கல்லாகிக் கிடந்ததாலோ, திங்கள் கழிந்தனவே யல்லாது திருமணம் கூடவில்லை. கருணாகரருக்கு இதனால் அளவிறந்த அல்லல் உண்டாயிற்று. சாமத்திற் கிணங்காத் தன் மகளை வேறு உபாயங்களால் வழிப்படுத்தவேண்டுமெனத் துணிந்தார்.

ஒருநாள் மாலையில் காந்திமதி பொழில்கண் டுலவி மீண்டதும் கருணாகரர் அவளைத் தன் வயினழைத்துக் “காந்தி, நின்வரவிற்கு நான் வெகுநேரம் காத்திருந்தேன். இன்று, இரண்டிலொன்று முடிவாகவேண்டும்; என்ன சொல்கிறாய்,” எனக் கூறினார்.

“நான் சொல்லும் செயலும் அற்றவளாயினேன். எனது சிந்தனை நீர் ஓர்ந்திருந்தும் விவாகம் முயல்வது வீணென்பது அறியீரோ.”

“பெண்ணே, உனது எண்ணத்தை யுணர என்னால் இயலவில்லை .... இறந்தனன் எனக்கேட்டுத் தரியாமல் விரைந்தோடி அவன்கரத்திற் சாய்ந்துகிடந்த நீ அந்நாள் என்னினைத்து என்செய்தாயோ........உன்னுடன் நியாயம் பேசிப் பயனில்லை....காலதாமதமின்றி மணம் கொண்டே தீரவேண்டும்....இது என் ஆணை....மற்றென்ன!”

“நமது ஆணையிலும் வலியதோர் விதி தடுக்கின்றது.”

“வந்தது வரட்டும். என்சொல்லின் வலிய விதிவேறு உனக்கில்லை......பின்னும் மறக்கப் பொறுத்திரேன்.”

“ஆயின் எனக்குத் தெய்வமே துணை!”

“மதியற்ற காந்தி, நின் செயலுக்குத் தெய்வ சகாயம் கிடைப்ப தரிது. தந்தைசொல்லைத் தட்டிவிட்டு எந்தத் தெய்வத்தை யழைப்பாய்...மேலும்...மறந்தேன்......உனக்குத்தான் தெய்வமுமில்லையே. சவகரிச் சடங்கை நீ யிகழ்ந்தாய், தனிப்போரைப் பழித்தாய். இந்தத் தயாபரரை நான் ஆராயாது சேர்த்துவிட்டேன். நமது மடத்திற்கு எங்கெங்கும் கண், எங்கெங்கும்காது. தெய்வ தூஷணையும் சாஸ்திர நிந்தனையும் தீயினால் தண்டிக்கப் படுவது திண்ணம். பெண்ணே, மறவாய்......” என்று கருணாகரர் ஆரம்பித்த தொன்றுமாய் முடிப்பது வேறுமாய்ப் பன்னி வருகையில் காந்திமதியின் கண்களிலிருந்து நீர் பெருகியது. அதுகண்ட கருணாகரர், “போ, காந்தி, வாயெடுத்தால் உனக்கு விம்மி யழத்தான் தெரியும். இன்று போ. நாளைக் காலையில் எனக்கு நீ தக்க உத்தரம் சொல்லாமற் போனால் பின் யாது செய்வேனோ அதை இப்பொழுது புகலேன்,” என விடுப்பக் காந்திமதியும் போயினள்.

நலமேனும் தீதேனும் நாட்டின்கண் பரவத் தலைப்படுமாயின் அரசனது சட்டதிட்டங்களால் அவை எந்நாளிலும் எத்தேயத்திலும் தடைபட்டதில்லை. இராஜதந்திரிகள் சட்டம் விதிப்பதாலும் அதைச் செலுத்தும் முறையிலும் தேசத்தின் கதியைத் தம் கைக்குள் அடங்கக் கொண்டிருப்பதாக எண்ணி விவகரிப்பதெல்லாம் வம்பே. இதுவரையில் எந்த மத சரித்திரத்திலாவது எந்தத் தேசச் சரித்திரத்திலாவது ஆள்வோர் கருத்துச் சட்டங்களின் மூலமாய்க் கைகூடியது எங்கும் காண்பதரிது. பிரபஞ்சமே மாயையென்பார் மாயாவாதிகள். ஆயின் அப்பிரபஞ்சத்தின் போக்கைப் பதிந்துவைக்கும் சரித்திர நூல்களும் மாயையாதல் வேண்டும். இல்லையேல் முன் நிகழ்ந்தன கண்டு மேல் இனிவருவன உணராமல் சட்டஸ்தாபனங்களால் உலகில் நிலவிய தீமை தொலையுமென்றும் எண்ணரிய இன்பம் வந்தெய்துமென்றும் கருதியோ, கருதுவதாகச் சாற்றியோ, மிடியின்றி மெய்வருந்தும் மானுட வகுப்பினர் மதியை என்சொலி வியப்பதே. சரித்திர சாஸ்திரமுதிர்ச்சி குறைவறப் பெற்றிருக்கும் இந்நூற்றாண்டிலேயே இந்த மயக்கம் தெளிந்தபாடில்லை யென்றால், ஆயிரமாண்டுகளுக்கு முன் விச்வகேசரி மன்னனும் ஸ்ரீ அகிலாண்டேச்வர ஆசார்ய ஸ்வாமிகளும், தீயினில் வறுத்தும் தலையைக் கொய்தும் பல்வகை ஒறுத்துப் புத்தமதத்தை யடக்க எண்ணினதுபற்றி யாவரும் அவர்தமை யிகழார். அவர் முயற்சியும் பயனற்றதாயிற்று. சனங்களுள் சிலர் சிவவேஷம் பூண்டொழுகினாலும் உள்ளப்பற்றைச் சிக்ஷைப் பயம் துரத்துமோ! மற்றுஞ்சிலர் மனிதன் விதித்த சட்டத்திற்கு அஞ்சுதல் ஆண்மையன்றென எண்ணித் தம் மனமே கரியாய்ப் புத்தமதத்தைத் தழுவி அதனால் உற்ற தண்டத்தை உவந்து ஏற்றனர். இதனால் பொதுஜனங்கள் தம்முள் புத்தமத ஆர்வம் பின்னும் அதிகமேயாயது. மடாதிபதி என்செய்வார். வருந்தித் திகைத்தாரெனினும் கையம்பற்றுப் போகவில்லை. சிக்ஷையின் கடுமை போதாதென்றும் அதனாற்றான் அதை எல்லோரும் ஏற்கினரென்றும் அவரருகிருந்த மந்திரிமார் சொற்கேட்டு எண்ணலாயினர். ஆதலால் ‘புத்த மதத்தவர் தீயிற்கு இரையாவர்’ என்னும் சட்டம் வெகு சீக்கிரத்தில் பிறந்தது. இக்கொடிய ஆக்கினைக்கு விச்வகேசரி

யின் அநுமதி கிடைத்ததும் வியப்பன்று. தன் தொல் குலம் வந்த சித்ராங்கன் ஆட்கொலை யேவினன் என்று எண்ணி எண்ணிப் புழுங்கிய மனத்தனாய் வாழ்க்கையிலேயே வெறுப்புற்றுத் தன்முன் நீட்டிய சாஸநத்திற் கெல்லாம் கையொப்ப மிடுவதன்றி அரசியல் கவனம் அணுவளவுமில்லாத அம்மன்னனிடத்தில் வீராடபத்ரன் இந்தச் சட்டத்திற்கும் எளிதில் அரசமுத்திரை ஒட்டி விட்டான். நெருப்பும் புகுந்து நீறாயினோர் பலர். அவ்வாறு தம் கொள்கையைக் கடைபிடித்து உடலை நீத்த வீராது புகழ் எங்கெங்கு மோங்கிக் கொளுத்திக் காட்டியது. சிலர் இக்கொடுங்கோன்மைக்கு ஆற்றாராயினர். மதப்பற்றுப் பெரிதும் இலர் ஆயினும் 'பொத்திய எரியில்புகுந்த பெருமகன்' என்னுமிப் புகழை நச்சி வெளிப்படையாய்ப் புத்தமதம் தழுவி மாண்டனர் ஒரு சிலர்.

காந்தாரநாடு அடைந்திருந்த இந்நிலைமை நம் கட்டழகியையும் ஒருவாறு பீடித்தது. சிற்றில்கோலி விளையாடும் சிறுமியாய் இருந்தநாள் முதலே இவ்வுலகத்தின் கண் தோன்றிய பல்வேறு தீவினையும் துன்பமும் அவள் மனத்தை உறுத்தும். பணத்தையே பிரதானமாகக் கொண்டு நிகழ்த்தும் பொய் களவு வஞ்சனையாதித் தொழில்களைக் காணவும் கேட்கவும் கூசினள். வயது முதிர முதிர இம்மறந்தனை யொழித்து அன்பெனும் அறத்தை நிறுத்தும் வகையொன்று அறியப் பெரிதும் முயன்று இருபதாண்டு நிறைவதற்குள் பல அறிஞர்களை யடுத்துத் தத்துவ விசாரணை செய்யலாயினள். எல்லாம் வல்ல கருணைவள்ளலாம் முழுமுதற் கடவுள் இவ்வுலகில் பாவமும் துன்பமும் படைத்து அதனுள்சீவகோடிகளைப் பாய்ச்சி அல்லல் காண்பதன் பயனும் பொருளும் என்னென்று தத்வ சாஸ்திரிகளையும் சமயவாதிகளையும் உலகநடையின் அனுபவம் பழுத்த பெரியோர்களையும் இடைவிடாது அவள் வினவுவதும், அவர் இப்படியென்றும் அப்படியென்றும் பெரும்பெரும் நியாயங்கள் எடுத்துக்காட்டுவதுமாய்ச் சிலகாலம் கழிந்தது. ஆனால் சமயக் கணக்கர் செறிந்த எந்தப் பட்டிமண்டபம் சென்று எத்தனை நேரம் கேட்டாலும் அவள் கொண்ட சந்தேகம் சிறிதும் தெளியாது புகுந்த வாயிலே மீண்டும் திரும்புவதுதான் முயற்சியின் முடிவன்றி வேறில்லை.

இதேவிதம் முயன்று மனம் சோர்ந்தவர்களுள் மடத்தைச் சார்ந்த துறவி தயாபரச்வாமியும் ஒருவர். இவருக்கும் காந்திமதிக்கும் நட்பு உண்டாயிற்று. அந்தச் சமயம் புத்தமதம் காந்தார நாட்டினுள் படர்ந்த சமயமுமாயிருந்தது. அன்புருவமாய அம்மெய்ப் பொருள் தன்பாலுள்ள அவ்வன்பு வெள்ளத்தில் ஒருசிறிது எடுத்து உடம்புதோறு முலவிய உயிர்களை மெழுகாமல் உலோப குணம் உடையதாதலின் மானுடர் தத்தம் சுயமுயற்சியால் அன்பை ஆக்கிவளர்த்துப் பெருக்குவது ஒன்றேயன்றி உய்யும் வழி பிறிதில்லை என்னும் மனப்பான்மைக்குப் புத்தமதக் கொள்கைதான் துணிவுதரும் எனத் தயாபரர் கருதலாயினர். இந்தச் சித்தாந்தத்தை யவர் காந்திமதிக்கு எடுத்தோத அவளுக்கும் இது பொருந்தியதாய்த் தோன்றியது. இருவரும் ஒன்று சேர்ந்து புத்தமதக் கொள்கைகளைத் தம்மாலியன்ற அளவு போதிப்பதெனத் துணிந்தனர். எனினும் தயாபரர் மடத்தை விட்டு விலகவில்லை. விலகினால் தன்மேற் சங்கை யேற்படும் என்னுமோர் அச்சமும், உள்ளிருந்தே மெள்ள மெள்ள மடத்தையும் புத்தமதத்திற்கு இணங்கச் செய்ய வேண்டும் என்னுமோர் ஆசையும் அவரை மடத்திலேயே அமர்த்தி வைத்திருந்தன. இவரிருவருக்கும் வாய்த்த [illegible] கந்தன் ஆயினன். அவ னியற்கையில் மூர்க்க குணம் பொருந்தியவனாதலாலும், தன்னுடன் ஒத்த வயதினனாய் வளர்ந்த தன்மையாலும் காந்திமதி யவனை அன்பின் வயப்படுமோர் பெருந்தகைச் செம்மலாக மாற்றி விடுவதெனத் துணிந்தாளாகி, அவனிடத்தில் மாணவற்குரிய நல்லிலக்கணங்க ளிருப்பதாகவும் எண்ணினள். புத்தமதக் கொள்கைகளின் தூயதன்மையே அப் பெருங் குன்றச் சிறுவனின் மனத்தைக் கவர்ந்து வருவதெனக் காந்தி நினைத்திருக்கக் கொள்கையன்று அது நவிலும் ஆசிரியையின் குமுதச் செவ்வாயும் செவ்வரி நெடுங் கண்ணுமே கவர்வன என்று தயாபரர் உணர்ந்தார். கந்தன் பெருங்குன்றத் தலைவனின் திருமகன் என்பதும் பின் அவன் அப்பதவிபெற இருப்பவன் என்பதும் அவருக்குத் தெரியும். ஆதலால் அவனை எவ்வாறேனும் புத்த சமயத்திற் சேர்த்துவிட வேண்டுமென்னும் ஊக்கம் அவருக்கு அதிகம் உண்டாயது. நகரங்களில் வசித்துப் பணமே சீவனமன்றிச் சீவன் எனவும் கருதி லோகாயத மார்க்கத்தில் உழலும் மாந்தரைவிட வனங்களில் இயற்கை நலங்களோடு வாழும் மனிதரை நல்வழிப் படுத்தல் சுலபம். கந்தன் இங்குப் பவுத்தனாகி விட்டால் பிறகு அவன் தலைவன் ஆனதும் பெருங் குன்றமடங்கலும் பவுத்தர்களாக்கி விடுவான். கொலை களவுகளைப் பெரும் பாதகமெனக் கருதா அந்தஎயினர் சீர்பெற்று அன்போடும் அறத்தோடுமோங்குவர். என இன்னவாறு எண்ணித் தயாபரர் கந்தன்பால் பின்னும் ஊக்கம்காட்டக் காந்திமதியைத் தூண்டிவந்தனர். காந்தியின் வடிவேயன்றி அவள்புகட்டும் மதத்தின் சாரம் அவன் மனதில் அதிகம் படிவதாகக் காணவில்லை. எனவே, காந்திமதி கந்தனுக்கு மனைவியாயும் பெருங் குன்றத்து அரசியாயும் அமைந்து அப்பிரதேசத்தை உய்யக்கொள்ள வேண்டுமென்று தயாபரர் சிந்தித்து அதை அவளிடம் சொல்லவும் சொன்னார். காந்திமதி கந்தனைச் சகோதரபாவமாய் ஆதரிக்கலாயினளே யல்லாது அவன்பால் காதல் கொள்ள இயன்றிலள். எனினும், காதல் பிறந்திலதேனும் கடமையைக் கருதி யவனை மணங் கொள்ளவும் ஒவ்வொருவேளை அவள் நினைத்தது முண்டு. இவள் இவ்வாறு ஒருமனப்படாமல் தளர்வதுணர்ந்த தயாபரர் கந்தனுக்கு அவன் பிறப்பையுணர்த்திக் காந்தியின் குணப் பெருமையைக் காட்டி அவளையே தன் மனைவியாய்ப் பெறுவதனிலும் வேறு சிறப்பிலது எனப் பன்முறை தெளிவிப்பார். சில ஆண்டுகள் இவ்வாறு செல்ல, அதற்கிடையில் புத்தமதச் சார்பினரை ஒறுக்கும் சட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் மடத்தினின்று பிறந்தன. தயாபர சுவாமிகள் பிறமதப் பற்றுள்ளவர் என்னும் சந்தேகம் மடாதிபதிக்கு நிச்சயமாயிற்று. நாடெங்கும் வேடம் புனைந்து வேவுபார்த்துத் திரிந்த ஒற்றர்கள் காந்திமதியின் பெயரையும் இம்மதத் துவேஷிகள் தொகுதியில் பதிந்து விட்டனர். ஈதறிந்தார் தயாபரர். காந்தியிடம் கூறினர். அவள் உடனே கந்தனுக்குச் செய்தியனுப்பி இரகசியமாய் வரவழைத்தாள். அவனிடம் நடந்ததைச் சொல்லித் தயாபரரை அழைத்தேகிப் பாதுகாக்கவேண்டினள். கந்தனும் மறுமொழியின்றி உடன்பட்டான். ஆனால் காந்தியும் அதே ஆபத்திற்கு உள்ளாயிருக்கின்றா ளாதலால் அவளையும் பெருங்குன்றம் வந்துவிட மிகவும் பரிந்து வேண்டினன். அவள் மறுத்தாள். தன்மேல் சந்தேகந்தா னிருக்கலாமே யொழியக் குற்றத்தை நிரூபிக்கச் சாக்ஷி கிடைப்பதியலாதெனத் தேற்றினள். கந்தனும் வேண்டிவேண்டி வாயற்றுத் தயாபரரை மாத்திரம் யழைத்துக்கொண்டு பெருங்குன்றம் மீண்டனன். இது நடந்து சிலதினங்களாயின. தயாபரர் மறைந்துபோன விதத்தை ஆராய்ந்த மடத்ததிகாரிக்குக் காந்திமதி கைகொடுத்தனளென்

பது தெரியவரலாயிற்று. உடனே காந்திமதியையும் கருணாகரரையும் தம் மதச்சட்டத்தின்படி விசாரிக்க உத்தரவு பிறப்பித்தனர். மடத்தில் தயாபரரிடம் மிகுந்த அன்பினராயிருந்த ஒரு துறவி இந்தவிதம் உத்தரவு பிறந்திருப்பதைக் காந்திமதிக்கு இன்றே சொல்லிப் போந்தனர். தனக்குமாத்திரமன்றித் தன் தந்தைக்கும் இடர் உண்டாக்கியதற்குத் தரியாது உளம்வருந்தி உட்புகுந்தவளைத்தான் உற்றதறியாக் கருணாகரர் மிகக் கடிந்து நாளைக்குள் கலாநாதனைக் கலியாணம் செய்து கொள்ள இசைந்து சொல்லவேண்டுமென்று வற்புறுத்தியது. ஆயின் அன்றிரவு அவள் நிலை என்னவாறு தடுமாறி யிருக்குமென்பது எளிதில் ஊகிக்கக் கூடியதன்று. இரவுடன் இரவாய் உற்றதைக்கூறித் தந்தையும் தானுமாய்க் கந்தனிடம் அடைக்கலம் புகுந்தாலோ என ஒருபோது எண்ணுவாள். தான் காதலே காரணமாகப் பெருங்குன்றம் நாடியதெனக் கலாநாதன் மதித்துத் தன்னுயிர் மாய்வனென மறுபோது மாற்றுவாள். துன்பமாம் கடலுளாழ்ந்து இவ்விரு எண்ணங்களால் மாறிமாறி எற்றுண்ட அப்பேதை மனம் கரைகாணா துழல்வதாயிற்று. ஈமத்தீ மண்டுமித் தருணத்தில் மணவினைக்கு ஓமத்தீ வளர்க்க முயல்கின்ற தன் தந்தையின் சொற்களை நினைக்க அவளுக்கு ஒரு சிறிது சிரிப்பும் வந்தது. மெல்லணையும் தன்னுடலும் மூழ்கமூழ்கப் புயற்கண்புனல் பெய்ய இரவைக்கழித்து அவள் காலைப் போது புலர்ந்ததும் கருணாகரர் இருந்த இடம் நாடிச் சென்றாள். துயிலற்ற முகத்தினளாய் அருவு ஒழுகும் கண்ணீரொடு தன்முன் துவண்டு நடக்கும் காந்திமதியைப் பார்த்த அவர் துணுக்கமுற்று எதிர் சென்று பரிவுடன் தழுவிப் "பெண்ணே, நின் மனத்திற்கு ஒவ்வாதாயின் விடுக, என் பொருட்டு அவனை நீ வலிந்து வரிக்க வேண்டவும் வேண்டா. என் செல்வி, பெண்பகைதேட உடன்படேன்," எனத் தேற்றினர்.

"ஐயகோ, தந்தாய்......என் செய்வேன் ஐய, பெண் பெற்றீரல்லீர் நும்முயிர்க்கு இறுதி கண்ட கூற்றையே பெற்று விட்டீர்" என மாழ்கிக் காந்திமதி யவர் தோளிற் சாய்ந்தனள்.

"என்ன, காந்தி, வெறியனோ! விழிதுயிற் கனவோ, இனிய சொல் உளவாகத் தீயன புகல்வதேனோ!"

"எந்தாய், நம்மில்லில் தீ புகுந்தது. மதம்பிழைத்த சட்டத்திற் கிலக்காகி விட்டோம்!"

"விட்டோமா? நாமா! சிவத்வேஷ சட்டத்திற்கா! இலக்காகி விட்டோமா? ......பேதாய் இந்தப் பிதற்றல் எங்குக் கற்றனை!"

"தந்தையே, தயாபர சுவாமிகளது தர்மோபதேசம் நீர் அறியாததன்று. அவர்மேல் இக்குற்றம் ஏற்பட்டது. அவரை நாம் மிக்க அன்புடன் ஆதரித்து வந்தோமன்றோ!

"ஆம், அதனால் என்! அவனவன் குற்றம் அவனவன் தலையிலே, நமக்கென்ன! நாம் என்ன செய்தோம்! எம்மை யார் தீண்டுவார்! தயாபரனை வைத்துக் கொளுத்தட்டுமே!"

"இல்லை, அவர் தப்பிவிட்டார், அதற்கும் நானே காரணம்."

"நீயே காரணமா! என்ன பெண்ணே, நம் குலத்தினும் ஒரு பைத்தியம் இருக்கட்டுமென்று நீபிறந்தாயா?"

"நான் தூதனுப்பிக் கந்தனை வரவழைத்து அவனுடன் தயாபரரைப் பெருங்குன்றம் போக்கி விட்டேன். அங்குச் சென்று அவரைப் பற்றுமாற்றல் எவர்க்குளது."

"என்னடீ பெண்ணே, என்னடி பாவி, என்னடீ பண்ணினாய். சிவத்வேஷியைத் தப்புவிக்கவும் துணிந்தனையோ! என்பாவி மகளே, சட்டத்திற்கு விரோதமாய்ப் பெருங்குன்றத்தவரை ஊரெல்லைக்குள் ஏற்கலாமோ, பேதாய. மடத்திற்கும் மன்னவற்கும் ஒவ்வாச் சாகசங்களை நீ செய்ய மேற்கொண்டது என்ன கெடுவிதியாலோ தெரியவில்லையே! அடி, காந்தி, ஈதறிந்தால் நம் கதி எப்படி முடியும்!"

"அறிந்துமாய் விட்டது. நம்மிருவர் பேரிலும் விசாரணை உத்தரவும் பிறந்திருக்கின்றது."

"ஐயயோ, கெட்டதா குடி........,"

"எனதாருயிர்த் தந்தாய், இட்டுண்டீர். ஈவது விலக்கியிலீர். பொய்யறியீர். பழிபூண் டொழுகியில்லீர், மேதினியிற் பாவியெனும் நாமம் படைத்தீரல்லீர்......நும் குலத்திற்கு ஊழித்தீ வைத்ததொரு கொள்ளியாள் பெண் பிறந்தாயினேன்........"

"பெண்ணே நீயழப் பேயுமிரங்கும். இங்ஙனம் புலம்பியென்செய்தோம். உரைப்பதுகேள். நீ இக்கணமே கலாநாதனைத் துணைகொண்டு காந்தருவெய்தி யிக் கொடிய நாட்டைத் துறந்தகல்வாய்........"

"கலங்கிய நும்மனம் தெளியாது இது புகல்கின்றீர். ஒற்றர் செறிந்த இந்நகரில் காந்து செல்வதரிது. இனிக் கலாநாதர் தலைக்கும் தீங்கு தேடுவதன்றிப் பிறிதொன்றாகாது......யானுடன்படேன்...நீர் செல்லும், பெருங்குன்றம் செல்லும். கந்தன் நும்மையும் காப்பன்."

"நன்றாய்ச் சொன்னாய்! உன்னை இக்கொடியோர் கைக்குக் காட்டிவிட்டு நான் பிழைக்கவும் வேண்டுமோ"

"இருவரும் ஒருங்கே மாள்வதில்......எந்தாய் நும் மகன் மாண்டபின், அவட்கழ ஒருவரேனும் இருப்பின்... என்னாவி அமைதிபெறும்."

"என் கண்மணி, உன்னை உயிருடன் சிதையிலிட்டுப் பின் குன்று புகுந்து கிழநரியென ஓலமிட்டழவோ பிறந்தேன், நிற்பயந்தேன். தங்கப் பதுமையே, நீ யுருக யான் ஊதவோ கற்றேன். முத்துப் பதுமையே, நீ சாம்பராகிச் சிதறவேயோ நான் பெருமூச் செறியவேண்டும்...... என் பாவாய்...என்னடீ செய்வேன்."

"எந்தாய், அழுதுமென், ஆற்றியென். நும்தெய்வம் எங்கே. நம்மை இந்நிலைகண்டு கொண்டாட வொரு தெய்வம் இன்றியமையாதெனின் அஃதிருந்தென், இல்லாதொழிந்தாலென்........"

"பெண்ணே, போதும். உன்தெய்வம் மாத்திரம் என்ன வாழவைக்கின்றது! உன் தெய்வந்தான் எங்கே."

இந்தச் சமயத்தில் குதிரை யுதைத்துச் சிலர் வீதிவாய் வருகின்ற சத்தம் இவர் காதிற் கெட்டியது. என் தெய்வம் கெடுத்ததோ உன்தெய்வம் காக்குமோ என இகலிய தந்தையும் மகளும், தம்மைப் பற்றியேகக் காவற் சேவகரே வருகின்றனர் என்றெண்ணும் வண்ணம் வந்த அப்பரிமாக்களும் அவர் மனைக்குமுன் நிற்கவும் நின்றன. கருணாகரர் புதல்வியின் தலையைத் தன் மார் போடணைத்துக் "காந்தி, கடவுளைப் பழித்தோமென்று காலனே வந்துவிட்டான் போலும்......பெண்ணே, இந்தா, நீ விரைந்து சென்று இருப்புப் பேழையைத் திறந்து இருகிழிப் பொன் கொணர்வாய், பித்தனும் பன்றியுமாய பெருங்கடவுளர் உதவாவிடத்து ஒருவேளை பணமே உதவலாம்..........வருமிச்சேவகர் வாய்நிறையப் பொன்னைப் பெய்து அடைத்துவிடுவோம்........கைநிறையப் பொன்னைக் கொட்டி யுடைத்து விடுவோம்......அவர் கண்ணையே பொற்கடு

வேய்ந்து மூடிவிடுவோம்...பின் நம்மைக் காணார், கைப்பற்றார், போய்ச் சொல்லார். இன்று மாலையளவு நம்மை விட்டு வைப்பாராயின் அதற்குள் கலாநாதனும் நானுமாய்ச் சேர்ந்து நின்னைக் காக்கும் வழியொன்று ஓராது போகோம்..." என விடுப்பக் காந்தியும், பணத்தை நம்பியன்று, தந்தைக் கிணங்கி, ஏகினள்.

வருவது காலனென்று எண்ணிக் கலங்கிய கருணாகரர்முன் அக்காலனைக் காலாலுதைத்த கடவுள்தன் பேரைப் பெற்ற சந்திரசேகரப் பெருமானே தோன்றினார். இவர் அவ்வறையுட் புகுவதும் காந்திமதி இருகையில் இரண்டு பைகளுடன் மீள்வதும் உடன் நிகழ்ந்தன. கருணாகரர் அவரையோர் இருக்கையி லமர்த்தி 'ஈண்டு நீர்கடந்தது என்?' என வினவினார். அதற்கவரும், "ஐய, மதம் பிழைத்த தண்டத்திற்கு நீவிரிருவரும் ஆளாகி யிருக்கின்றீர். உத்திரவும் நேற்றே பிறந்தது. உமது முகக் குறியால் இஃது நீர் அறியாதது மன்றென்றுணர்கின்றேன். கருணாகரரே, நம் கட்டழகியுடன் நீர் காலம் தாழாது இக்கணமே இந்நகர் விட்டகலல் வேண்டும். அன்னதற்கு என்னுதவியும் புரியவெண்ணியே இங்குப் போந்தனன். நும் வழித்துணைக்குக் குதிரைவீரர் சிலர் வாயிலில் காத்திருக்கின்றனர்." எனக் கூறினார்.

"பிரபு, சஞ்சரிக்கத் தொலையாத இப்பேருலகம் ஒளிப்பதற் கென்றால் இடம் போதாதே! எங்குச் செல்வோம்!" என்றார் கருணாகரர்.

"முதலில் இவ்விடம் விட்டு நீவிர் அகல்தல் முக்கியம். இன்னும் இரண்டொரு நாழிகைக்குள் காவற் சேவகர் வருதலுங்கூடும். ஆதலால் இப்படியே எழுந்து என்மாளிகைக்கு வந்து விடுங்கள். அங்குநின்று மேல்நடப்பன கருதுவோம்."

"பெரியீர், மன்னவனாணையை வெறுத்து எம்மை நீர் காக்கப் புகின் நுமக்கும் தீங்கு நேரலாம். எம்விதி எம்முடன் நின்றால் போதும்..." என இடையே காந்திமதி இயம்பினள்.

"என்ன! யான் இந்நகர் தலைவனா யிருத்தல் வாய்மையாயின் நும்மனோர்க்குற்ற தீதில் எனக்குமோர் கூறு உளது. வருந்தல் காந்தி. என்மாளிகையின் மதில்கடந்து நும்மைப் பற்றியேகப் புகுவானொருவன் இப்புவியில் இல்லை. வந்தானேல், அந்த உத்திரவை, அரக்கும் முத்திரையும் அடங்க, அவனையே மென்று தின்ன வைக்கின்றேன்காண்......புறப்படுங்கள்"

வேண்டுகோளாயினும் கட்டளையாயினும் தாம் சொல்வதை எவரும் மறுப்பதற்கியலா வாக்குநயமும் முகப்பாங்கு முடையவர்களுள் சந்திரசேகரர் ஒருவர். கருணாகரர் உட்சென்று பணத்தையும் மற்ற விலையுயர்ந்த பொருள்களையும் பத்திரப்படுத்திவிட்டுத் தனபாக்கியத்தையழைத்து, "அம்மே தனபாக்கியம், இந்த வீட்டைச் சிறிது காலம் செவ்வனே காத்திரு. இதுவரையில் நீ செவிடு மாத்திரம், இனி ஊமையும் ஆகிவிட வேண்டும். எவர்வந்து கேட்டாலும் நாங்கள் யாருடன் எங்கே போயிருக்கின்றோ மென்பதை ஊகித்துச் சொல்லத் தலைப்படாதே," என்று திட்டமும் செய்து வந்து தாம் உடனே ஆயத்தம் எனச் சந்திரசேகரருக்குச் சொல்ல, மூவரும் புறப்பட்டுப் பகற்போஜனப் பொழுதிற்குள் சொவிளைமும் போய்ச் சேரலாயினர். அம்மனைக்குரியார் தன்னுடன் வந்த விருந்தினர்க்கு உபசாரம் செய்து உணவளித்து மலர்முகத்தோ டளவளாவி சொந்துள அவர் சிந்தனை மகிழ்வுறப் பற்பல பேசிப் போக்கியபொழுதும் சாய்ந்தது. பரிதியும் கதிர்களை ஒடுக்கி மேற்றிசைப் பரவையில் படியும் அமயம், காந்திமதி மெல்லென நடந்து அம்மாளிகைச் சூழ்ந்த பூவின் மணமொடு புள்ளின் ஒலிபிறங்கும் பொழிலூடு படர்ந்து மனமே துணையாய் உலவித்திரிய, இந்திரதனுவு நாண எந்திரவாவி யோங்கும் சுந்தரப் புனலின் திவலை சிறு சிறு சொரியக் கண்டங் கயல்நின்றாள் 'ஏற்றமும் தாழ்வுமாகி ஊற்றுநீர் வற்றுமட்டும் துள்ளியும் தவழ்ந்தும் மாறிமாறிப் பின் மாய்ந்தே போகும் மானுடர் வாழ்க்கை போல ஆயது இச்சூத்திரப் பொய்கை. மற்று இந்நீர் எங்கிருந்து வந்தது, போவது மெங்கு! இரவியால் கவறி எழிலியாய் மாறிச் சயிலம் சார்ந்து மழையில் இறங்கி நதியெனப் பாய்ந்து கடலுட் புகுதலும்—மீண்டுமக் கடலே காய்ந்து மேகமாய்ப் பரந்து மழையாய்ப் பொழிந்து பெய்த பாத்திரத்தின் பெற்றியதாகும் நீரின் நீர்மையே உடல்விட் டுடல்பற்றி இடையறாது கறங்கும் இவ்வுயிர்தனின் சகடவாய்மையும் போலும்.........அன்றன்று, அற்றன்று......"மாற்றுதற் கர்த்தா யார்?" என்று தன் நெஞ்சொடு வினவி அயல்மறந்துநின்ற அரிவையின் பின் கருணாகரரும் சந்திரசேகரரும் வார்த்தையாடினராய் வந்து சேர்ந்தனர். வந்தவர் தம்முன் பேசியிருப்பதைக்கண்டு காந்திமதி சிந்தனை தீர்ந்து மலர்களை மோந்தும் கொடிகளைத் திருத்தியும் அவர்களது அருகிலே அங்குமிங்கும் உலவுவளாயினள். மற்றிருவரும் ஒரு தெற்றியிலமர்ந்து உரை தொடர்ந்தனர்.

"நும்மைவிட்டுப் பிரியப் பெரிதும் வருந்துவான்; காந்தியையும் அழைத்துச் சென்றாலென்ன?" என்றனர் சந்திரசேகரர். இதற்குப் பதில்சொல்லக் கருணாகரர் தாழ்வது நோக்கி, "ஐய, பெருங்குன்றம் துருவிப் பழகியுள்ள உமக்கு அவளை வழிக்கொண்டேகல் அரியதன்று. பருக்கைபாய அம்மெல்லியல் சீறடி சற்றுத் தளரலாமாயினும் அதனால் அவளதழகு பழுதாகுமோ!" என மீண்டு மவர் உரைத்தனர்.

"நான் தாழ்வதெல்லாம் என் பெண்ணினழகு பழுதாகுமேயெனும் வியாகுலத்தா லன்று.........வஜ்ரதா இளவல் பலவாண்டு எனது விருந்தினனாய் இருந்துளன். அவன் என் மகள்மீது செலுத்திய நாட்டம் எக்காலத்திலும் எனக்கு ஐயம் விளைப்பதாயிற்று. புரசை வீதியில் என் மனையகத்தில் நோக்கிய நோக்கினால் ஒன்றும் நேராது. ஆனால் பெருங்குன்றத்தில் நான் துணையின்றி யிருக்கக் கந்தன் தன் கோட்டைக்குள் இந்தப் பார்வையே பழியாய் முடியலாம்."

"கருணாகரரே, பெருங்குன்றத்தவரோ இயற்கையிலேயே மூர்க்கர்; கந்தனுக்கும் பயப்படுகின்றீர் எனக் காண்கிறது. ஆயின் நும்மைத்தான் அவன் காப்பான் என்பது என்ன உறுதி. இப்படியிருக்கப் பெருங்குன்றமே புகுந்தொளிய நீர் துணிந்தது என்னவோ!"

"பிரபூ, அவ்விளமகன் யான் உரித்த நகத்திற்கு ஒரு தீங்குறச்செய்யான். அவன் வரலாறு சொல்கின்றேன் கேட்பீர். காந்தியும் அவனின்னவன் என்பது அறிந்திருக்கலாமேயன்றி முற்றிலும் அறியாள், அவளும் கேட்கட்டும்," என்று கருணாகரர் காந்திமதியை அழைக்க அவள் அருகுவந்து தரையில்படிந்து பறித்த மலர்களைத் தன் மடிமீது வைத்துத் தொடுத்தனளாய் அமர்ந்தாள். கந்தனின் வரலாறு கூறக் கருணாகரர் ஆரம்பித்தார்.

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

அன்பு ஆராய்ச்சி.

[368-ம் பக்கத் தொடர்ச்சி]

செம்பில் உள்ள செம்பொன்

நேர் உவமை :—அன்பு என்பதிற் பொதிந்து கிடக்கும் உயரிய உண்மைகளை உணர்ந்தோம். இனி, அகப்பாட்டெல்லாம் காதற் பாட்டாய் இருப்பானேன்? இதுவரையில் கூறிவந்ததின்கின்றுமே அதுவும் புலனாகியிருக்கலாம். திருவள்ளுவனார் தமது அன்பு நெறியின் தொடக்கமாக வாழ்க்கைத்துணை நலந்தானே கூறினார். உள்ளது கொண்டுதானே உலகியலை நடத்தவேண்டும். உலகியலில் பொதுவாக, அன்பின் பெருக்கினைக் காதலி காதலனிடத்தே காணலாம். அஃது உண்மையோ பொய்யோ யாமறியோம். ஆனால் அவ்வாறுதான் உலகம் பேசிக் கொள்கின்றது. இந்த அன்பின் வழியாகத்தான் அந்த அன்பினை அறிதல் வேண்டும். ஒரே தாண்டாகக் கடலையும் வானத்தையும் தாண்டி அப்பாலுக்கப்பாலான அன்பே சிவமென்றால் அறிந்து கொள்வார் யார். முடவன் கொம்புத்தேனுக்கு வேணவாக் கொண்ட கதையாக முடியும். கண்டது கொண்டு காணாததையும் அறிந்தது கொண்டு அறியாததையும் கற்பிப்பதே கல்விமுறை. அப்படித்தான் நமது அருமைக் குழந்தைகள் கல்விகற்று அறிஞர்களாகின்றனர். ஆமா அறியாதவர்களுக்கு ஆவினைக்காட்டி, அது போன்றது என அறிவு கொளுத்துகின்றோம். ஆற்றைப் பார்த்தறியாதவர்களுக்குக் கால்வாயைக் காட்டி அது போன்று நீரோடும் மிகமிகப் பெரிய கால்வாய் என அறிவுறுத்துகின்றோம். இம்முறையினைத்தான் முன்னோர்களும் கையாண்டனர். உலகிலுள்ள பொருள்களைப் பற்றி எடுத்துரைக்க வேண்டுமானால் பலவகையாக விளக்கி வருகின்றோம். சில பொருள்களைக் கையிற் பிடித்துக் கொடுத்துக் காட்டலாம். சிலவற்றினை இயல்பும் உருவும் வடிவும் உவமையும் கூறி விளக்கலாம். இவற்றிற் சிலவற்றை துய்த்துணர்ந்துதான் நன்கு அறிந்து கொள்ள முடியும். இனிப்பை அறியாதவனுக்கு வாயில்கற்கண்டை அள்ளி இட்டுத்தான் இனிப்பை உணர்த்தவேண்டும். மற்றைய இனிய பொருள்களை உணர்த்த வேண்டுமானால், 'இது போன்றது' எனச் சொல்லிவிடலாம். ஆகவே அன்பினை அறிவிக்கப் புகுந்தவர்களும் சிறிதளவு நாம் துய்த்துணர்ந்த அன்பினையே காட்டி அதுபோன்றது என்று முடித்தனர். இத்தகைய பொருள்களைத் துய்த்துணராது நூல்கள் கூறும் இயல்பும் உருவும் கொண்டு அறிந்து கொள்ளுதல் அருமையினும் அருமை வெண்மை என்பதனை உணராத பிறவிக் குருடன் கதை இங்கு நினைவிற்கு வருகின்றது :—ஓர் ஊரில் ஒரு குருடன் இருந்தான். பால் குடித்துப் புரைக்கேறிக் குழந்தை ஒன்று இறந்ததென ஊரார் பேசிக்கொள்வது அவன் காதில் விழுந்தது. பால் என்பது யாதோ என்று அறிய விரும்பிப் பலரையும் அஃதெங்ஙனம் இருக்கும் என்று வினவினான். பாலைக் கொண்டுவந்து அவன் கையில் கொடுத்து வாயில் சிறிது ஊற்றிக் காட்டாது, பால் கொக்கைப்போல் வெண்மையாய் விளங்கும் என விரிவாக விளக்கினார்கள். பிறவிக் குருடனுக்கு வெண்மை என்றால் என்னதெரியும், கொக்கு என்றால் என்னதெரியும். ஆகவே மறுபடியும் 'கொக்கு எப்படி இருக்கும்' என்று கேட்டான். கையைக் கொக்குப்போல் வளைத்துவைத்துக் காட்டினார்கள். "ஐயையோ" என்று திடுக்கிட்டுக் கதறி "இத்தனை கோணல் மாணலாக இருப்பதையா குழந்தையின் சிறிய வாயில் வைத்தடைப்பது-சாவதற்குக் கேட்பானேன். இப்படியும் செய்வார்களா" என்று கூறிப் போயினனும். அன்பினை விரித்துரைக்கப் போயினால் இவ்வாறுதான் முடியும் "உலகத்துப் பொருள்தான் இரண்டுவகையான் உணர்த்தப்படும்; உண்மை மாத்திரை உணர்த்திப்பிழம்பு உணர்த்தப் படாதனவும் உண்மையும் பிழம்பும் உணர்த்தப் படுவனவும் என்பன. அவற்றுள், உண்மை யுணர்த்திப் பிழம்பு உணர்த்தப் படாதன காமமும் வெகுளியும் மயக்கமும் இன்பமும் துன்பமும் முதலாக உடையன.

> "ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா
> கற்பும் ஏரும் எழிலும் என்றா
> சாயலும் நாணும் மடனும் என்றா
> நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு
> ஆவயின் வரூஉங் கிளவி எல்லாம்
> நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது
> காட்ட லாகாப் பொருள என்ப"

என்றாராகலின். இனிஉண்மையும் பிழம்பும் உணர்த்தப் படுவன மாடக்கூடன்மாகிலம் தொடக்கத்தன என்று கொள்க. அன்பு என்னும் பொருள் உண்மை மாத்திரையல்லது பிழம்பு உணர்த்தப்படா தென்பது."

என்று நக்கீரனார் கூறுதல் காண்க. இனி அவரே, "அது (அன்பு), குடத்துள் விளக்கும் தடற்றுள் வாளும்போல் இது காண் அன்பெனத் தந்து காட்டலாகாது" என்றும் கூறுவர். குடத்தில் எரியும் விளக்கும் உறையில்இட்ட வாளும் உள்ளே மறைந்திருந்து, வெளியே தோன்றாதிருப்பது போல அன்பும் உள்ளத்தினுள்ளேயே ஒளிர்கின்றது; அதனை வெளியே கண் கொண்டு காணலுமாகாது; கையால் தொடவும் இயலாது; மூக்கால் முகரவும் முடியாது; நாக்கால் சுவைக்கவும் கூடுவதில்லை. மனத்தால் அறிவ தென்றால் ஒருவேளை இயல்வதாகலாம்.

எதிர்மறை உவமை :—அறிந்தது கொண்டு அறியாததை விளக்கவந்த பெரியோர் சிற்றன்பு காணக் கிடக்கும் இடத்தினைக் காட்டிப் பேரன்பினை அறியவைத்தனர். எருமையைப் பாராத ஒருவனுக்கு அதை அறிவிக்கப் பசுவினைக் காட்டுகின்றோம். இதுபோன்றது அது என்கிறோம். ஆனால் பசுவுக்கும் எருமைக்கும் உள்ள வேற்றுமையையும் எடுத்துக் காட்கின்றோம். பசுவிற்கு அலைதாடியுண்டு என்பதனையும் எருமைக்கு அஃதில்லை என்பதனையும் சுட்டுகின்றோம். பசுவிற்கு உடம்பில் மயிர் அடர்ந்திருக்கும் என்றும் எருமைக்கு அங்ஙனமில்லை என்றும் கூறுகின்றோம். எருமை நிறத்தில் சாம்பற் கருமை என்கிறோம். கொம்பு வீச்சு வீச்சாயிருக்கின்றது, என்று வேறுபாட்டையும் விளக்கி வைக்கின்றோம். அஃதேபோலக் காதலன் காதலிபால் உள்ள சிற்றன்பிற்கும் உண்மைப் பேரன்பிற்குமுள்ள வேற்றுமையையும் காட்டி அத்தமிழ்ப் பெரியோர்கள் நமக்கு அன்பு இன்னதெனத் தெளிவாக விளக்கி உள்ளங்கை நெல்லிக்கனி யாக்கிவிட்டனர். அதுபற்றித்தான் அகப்பாட்டெல்லாம் காதற்பாட்டாகக் காணப்படுகின்றன. பசுவினைப் போன்றது எனக் கூறிப் பின்னர், அவற்றின்

வேற்றுமையை எடுத்துரைப்பாரைப் போல, பழந்தமிழர்கள் காதலர்க்கும் அன்பர்க்கும் உள்ள ஒற்றுமை நயத்தால் உவமை கூறிவந்து பின்னர் அன்பர்க்கும் காதலர்க்கும் உள்ள வேற்றுமையையும் காட்டுகின்றனர். பசும்பால் வேண்டுமானால் அப்பட்டப்பால் கிடைப்பதேது இந்தக்காலத்திலே. தண்ணீரை நேரும்கூறுமாகக் கலந்த பால்தான் கிடைக்கின்றது. அதனை வாங்கிப்போய்க் காய்ச்சித் திரட்டுப் பாலாக்கிக் கொள்கின்றோம் அன்றோ. அங்ஙனமே, அன்பு என்பதும் அப்பட்டமாகக் கிடைப்பதில்லை. கிடைக்கும் கலப்பன்பை எடுத்து அறிவுகொண்டு காய்ச்ச வேண்டும். கலப்புப் பொருள்களை ஆவியாய்ப் பறக்க அடித்து அப்புறந்தள்ளி உள்ளீடான அன்பினை உணர்ந்து துய்த்தல் வேண்டும்.

ஒப்பு-திரு:-எத்தகைய அகமுடையான் பெண்டாட்டியிடத்து அன்புண்டு? ஓர் ஆண்மகனும் ஓர் பெண்மகளும் ஒருவர் ஒருவரிடத்தில் அன்பு பாராட்டி அகமுடையானும் பெண்டாட்டியுமாய் வாழ்வது அன்பொன்றினாலேயே ஆவது அன்று. இப்போது பல பட்டம் பெற்றவர்களும் பணத்துக்காகவேண்டித் தொழுநோயால் உடலழுகிய பாதிமூஞ்சிப் பெண்ணையும் மணந்து கொள்கின்றனர். உயர்நிலையில் உள்ள பெரியோர்களது பெண்களை உலகில் வேலையில்லாது திண்டாடும் உயரிய பட்டம் பெற்றவர்கள் மாமனார் அருளால் வேலை பெற்று வயிறு வளர்க்க வேண்டி, அப்பெண்கள் கருங் குரங்குகளாக இருந்தாலும் மணந்து கொண்டு, தம்வேலை முடிந்ததும், தேவடியாள்வீட்டில் அவளுக்கு அடியாராய் அழிந்தொழிகின்றனர். இவ்வாறு நடப்பது இக்காலத்தில்தானா? ஏழைகளிடத்தில்தானா? இல்லை. பழையகாளிலும் பெரிய அரசர்கள் தமது அரசினை நிலைநிறுத்தி வலுப்பெறச் செய்வதற்காக வல்லரசுகளோடு பெண் கொடுத்து வாங்கிக் கொள்வது பெருவழக்காக இருந்து வந்தது. எனவே, வெறுஞ் செல்வாக்கின்மேல் ;உள்ள பற்றினாலேயும் செல்வத்தினிடத்திருக்கும் அவாவினாலேயும் இரண்டு பேர்கள் காதலன் காதலியாக ஒன்று கூடுவார்களானால் அவ்விடத்தும் அன்பு உண்டென்று மயங்கிவிடுதலாகாது என்பர் தமிழர். அங்கு அன்புமில்லை, இன்பமும் இல்லை. ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உயர்ந்த செல்வத்திற் பிறந்தோராக இருவரும் இருப்பார்களானால் செல்வத்தின்மேல் நாட்டமாய்த் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை. ஆகவே அன்பானது எழவேண்டுமானால் ஒத்த திருவினராகக் காதலனும் காதலியும் விளங்கவேண்டு மென்றனர். திரு என்பது, வெறும் பொருளுடைமையல்ல. செல்வத்திலே திளைப்பதும் அல்ல. அஃது செல்வத்தில் பிறந்து செல்வத்தில் வளர்ந்தோரது உள்ளநிலை. அவர்களது உள்ளம் மேற்சொல்லியவாறெல்லாம் இழிவாக நடந்துகொள்ளாது. "திருஎன்பது பொருளுடைமையும் பொருள்கொணர்ந்து துய்த்தலும் இன்றி எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாயதோர் உள்ள நிகழ்ச்சி" எனப் பேராசிரியர் கூறுவது காண்க.

ஒப்பு—உணர்வு:—செல்வத்திற்காகச் சீரழிவார் பலராயின் கல்விக்காகக் கண்ணழிவார் சிலராயினும் இல்லாமற் போகவில்லை. படித்த அகமுடையானைத் தேடுவாரும் படித்த பெண்டாட்டியை நாடுவாரும் உலகில் பலராகி உள்ளார்கள். பண்டை நாளிலும் இவ்வாறே காணப்பட்டது. தமிழறியும் பெருமான் கதை நினைவிற்கு வருகின்றது. கல்வி கேள்விகளில் பெரிய பெண்ணொருத்தி அறிவில் சிறந்த ஆடவனை மணக்க எண்ணினள். மணந்துபோக வந்த புலவர்கள் எல்லாம் அவள் கேட்கும் கேள்விகளுக்கு விடைதர இயலாமல் விழித்து நின்றார்கள். அவர்களை இகழ்ந்து தள்ளி இவள் இறுமாந்து நின்றாள். அவளது செருக்கை அடக்க எண்ணினார் நக்கீரப் பெருமானார். ஓர் எதுங்கெட்ட விறகு தலையனுக்குக் கல்வி கற்பித்து அவளை வெல்லச் செய்தார். எங்கும் வழங்கிவரும் மற்றொரு சிறுகதை உண்டு. அதிலும் ஒரு பெண் அறிவுள்ள அகமுடையானை மணக்கவேண்டினாள். வருவாரது அறிவாழத்தை அளந்து கொண்டே இருந்தாள். ஓர் நாள், மணம் பேச வந்தவன் பேசிக் கொண்டிருக்கையில் புறக்கடையில் "சல சல" என்ற ஒலி யுண்டாயிற்று. "அஃது என்ன" என்றதும் 'உடும்பு'என்றான். "சரி காதுகுடைய இறகுகொண்டுவா" என்றான். அவ்வறிவிலியை அப்புறந் தெறித்துவிட்டு, நின்றவள் மற்றொருவன் வரக்கண்டு அவனிடம் முன்னடந்ததை எடுத்துரைத்தாள். இவன் "சீ சீ அவன் ஒன்றுந் தெரியாத மூட்டான். ஆமை என்றுநினைத்துக் கொண்டான் போலும்" என்று எல்லாம் அறிந்தவன் போல நீட்டிப் பேசினான். அவள் அதற்குப்பின்னர் ஆடவர்கள் எல்லாம் அறிவிலிகள் என்று முடிவு செய்து கொண்டதைப் பற்றி யாமொன்றுங் கூறவேண்டுவதில்லை. அறிவுள்ள அகமுடையானே வேண்டுமென்று பலர் இருந்திருந்தால்தானே அவர்களைப்பற்றி ஒருகதை எழும். இனி, இசைவாணரது பண்ணின் இனிமைக்கு மயங்கி விலைமாதரும் அவர்கள்பின் செல்லவில்லையா. யசோதர காவியத்தில் இசையுணர்விற் சிறந்தவனாய் இருப்பதுபற்றித் தொழுநோய் பிடித்த இழி குடியிற் பிறந்தமாவெட்டியானைத் தன்னுயிர்க்காதலனாக விரும்பினள் அரசசெல்வத்தில் ஆழ்ந்த அரசி எனநாம் படிக்கவில்லையா? ஆகவே இருவரும் ஒப்புயர்வற்ற உணர்வுடையராயினால்தான் அவ்விருவரும் அன்பினால் ஒன்று கூடினார்கள் என்று கூறச் சிறிது இடமுண்டு." உணர்வென்பது அறிவுடைமை, அஃதாவது உலகியலால் செய்யத் தகுவது அறிதல்" (பேராசிரியர்)

ஒப்பு-ஆண்டு:-இன்னும், அக்காதலர்கள் ஒத்த ஆண்டினராக இருந்தால்தான் அன்பெழுந்து நிகழும் என்றும் அப்பெரியோர் கண்டனர். கிழவராய்ப் போனவர்கள் இளம்பெண்களை மணக்க விரும்புவதை இப்போதும் யாம் பார்க்கவில்லையா? விரும்புவதோடு விட்டுவிடுகின்றார்களா? அறுபது சென்ற கிழவனும் ஆறு எட்டு நிரம்பாத அழகிய பெண்ணும் மணந்து கொள்வதை எங்கும் காணலாம். அவன் இவளது இளமையை நோக்கி மணக்கின்றான்; இவள் அவனது பணத்தைநோக்கி மணக்கின்றாள். இருவழியும் அன்பென்பது இல்லை. ஆகவே அன்பு விளைய வேண்டுமானால் காதலர்கள் ஒத்த ஆண்டினராய் இருத்தல் வேண்டும். "ஒத்த ஆண்டென்றால் இவனுக்கு இருபதாயின் அவளுக்கும் இருபதாக வேண்டுமென்பதல்ல. அவனும் பதினாறாட்டைப் பிராயத்தான் இவளும் பன்னிராட்டைப் பிராயத்தாள்" என்பர் நக்கீரர். "யாண்டென்பது ஒத்தவாறென்னை யெனின் பன்னீர் யாண்டும் பதினாறியாண்டும் பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பருவ மென்பது வேதத்தில் ஒப்ப முடிந்தமையின் அதுவும் ஒப்பெனவேபடும்" என்பர் பேராசிரியர். இவளுக்கு அவன் ஈடில்லை எனும் உலக வழக்கையும்காண்க. பதினாறுவது ஆண்டில் தான்ஆடவர்களுக்கு உடல்முற்றிக்காதல்நினைப்பெழுகின்றது. அவ்வாறு பெண்களுக்கும்பன்னிரண்டாண்டில் எழுகின்றது. பதினாறில் காதல் நினைப்பினைச் சுவைக்கின்றான் புத்தம் புதிதாக. அந்நினைப்பினைச் சுவைக்கும் போதே காதலியின் எதிர் அவனைக் கொண்டுபோய் விட்டனர் பழந் தமிழர். பதினாறிற் கப்புறமோகாதலினைப்புப் பழைய தாகின்றது. ஆனால் பன்னிரண்டிலும் பதினாறிலுமோ திருமணம் இயற்றுவது? இல்லை.

உலகியல் கூற இப்பெரியோர்கள் வந்திலர். அன்பாராய்ச்சி செய்ய முன்வந்து அன்பினை எவ்விடத்துக் காணலாம் எனத் தேடிச் செல்கின்றனர். உலகியலிலோ காதலும் அன்பும் பலவகையாகக் கிடக்கின்றன. அவ்வுலக இயலில் காணக் கிடக்கும் வழக்க ஒழுக்கங்களும், செயலும் நினைவும், மொழிகளும் வழிகளும் அன்பினை மறைத்து நிற்கின்றன. அவை ஒழியுமானால் அன்பினைக் காணலாம் என்றனர். அவ்வாறு அவை ஒழிந்தொரு புத்தம் புதிய உலகத்தினைப் புலவர்கள் நமக்காகப் படைத்தருள்கின்றனர். நக்கீரரும் இதனைப்பற்றிப் பேசும்போதெல்லாம் "இல்லது இனியது நல்லது எனப் புலவரால் நாட்டப்பட்டது" என்கின்றார். ஆகவே உலகியலுக்கு ஒழுக்க முறையைக் கற்பிப்பதற்காக இவ்வாண்டு வரையறையைப் பழந் தமிழர்கள் ஏற்படுத்தினர் அல்லர்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி.

கருவிகள் (தொடர்ச்சி)

(372-வது பக்கத் தொடர்ச்சி.)

சிறப்புக் கருவிகளில் சில.

$ நூலின் வரலாறு:—இலக்கணவாயிலாய் ஆராய்வோமாக. எல்லா நூல்களும், சுருதி யுக்தி அனுபவம் இம்மூன்றுக்கும் பொருத்தமாயிருக்க வேண்டுமென்று ஆன்றோர் கூறுவதால், நாம் சார்புநூலும் வழிநூலும் எழுதக் கூடுமேயன்றி முதல்நூல் எழுதப் பாத்திரம் பெற்றில்லோம்.*

முன்னோர் நூலில் உள்ள முடிவுகளைத் தழுவி நாம் செய்யவேண்டிய நூலில் வேறுபாடுகள், அந்நூல் முடிவுகளோடு கூட்டிப் பழயன கழித்தலும் புதியன புணர்த்தலும் † வழிநூல் இலக்கணமென்ப. சிறுபான்மை அங்ஙனம் ஒத்தும் மற்றவை ஒவ்வாமையு முடையது ‡ சார்புநூலாகும். இவ்விருவகை நூலுக்கும் முகவுரை எழுதவேண்டியது அவசியம். அத்தகைய முகவுரை நூலாசிரியன் எழுதுவது பொதுப்பாயிரமாயும், அவன் தன்மையைக் கோரிய பிறர் எழுதுவது சிறப்புப் பாயிரமென்றும் இருவகை நூன்முகங்கள் எழுதுவது எவ்வித நூல்களுக்கும் இன்றியமையாதனவென்று புலவர் கூறுவர். தான் எழுதும் அணிந்துரையில் கொள்வதற்கு அதிகாரிகள் எவரென்றும், கொடுப்பதற்கு அதிகாரிகள் எவரென்றும், நூலின் சாராம்சம் இன்னதென்றும் அதை எவ்விதமாய்ப் பரவச் செய்யவேண்டுமென்றும் செப்பவேண்டும். தற்காலத்தில் நூல்கள் எழுதுவோர் புனைந்துரை எழுதுவது, மிகைப்படக் கூறுவதேயன்றிக் குன்றக் கூறுவதில்லை! சிறப்புப் பாயிரம் பெரும்பாலும் சாத்துக் கவிகளாய் வருகின்றன. இங்ஙனம் தமிழில் இவ்விருவகைப் பாயிரங்களும் வழங்கி வருகின்றன. அம்மரபைப் பற்றியொழுகல் தமிழ் நூலாசிரியன் கடனே. நமது முன்னோர் நாற்பொருள் பயக்க வேண்டு மெந்நூலும் என்றார். தற்காலத்தில் அங்ஙனம் பயக்கும் நூல்கள் ஏகதேசமே. இம்மையில் பொருள் பயக்கும் எண்ணமே யொழிய, அறத்தையும் வீட்டையும் கருதும் ஆசிரியர் சிலரே. பொருள் பயக்குமாறு படிப்போருக்கு இன்பம் பயக்கச் செய்யும் இன்பமன்றி ஏனைய இன்பம் தற்கால நூல்களில் இலவாம்.

இலக்கிய ஆராய்ச்சியில் இன்றியமையாதன எழுவகை மதம் * என்பர். இவை உடன்படல், மறுத்தல், பிறர் மதத்தை அங்கீகரித்துப் பின்னர்த் தள்ளுதல், தான் ஒரு பொருளை எடுத்து ஸ்தாபித்து அதனை ஆங்காங்கு நிலைநிறுத்தல், முரணாகக் கூறும் இருவர் கொள்கையில் ஒன்றைக் கண்டித்து ஒன்றை அங்கீகரித்தல், பிறர் நூல்களில் உள்ள குற்றங்களைக் காட்டி அவற்றைச் சீர்திருத்தும் உபாயங்கள் காட்டுதல். இங்ஙனம் ஆராய்ச்சியிற் புகாவிடில் அது செவ்வனே விளங்காது. இதற்கு முப்பத்திரண்டு† உத்திகளும் மேலோர் துணையாக வைத்தனர். அவற்றை நன்னூலில் காண்க.

நூலில் பல விடயங்களைக் கூறப்புகுவோன் அவற்றில் ஒவ்வொரு இனப் பொருள்களையும் ஒருவழி வைக்க

$ நூலி னியல்பே நுவலி னோரிரு
பாயிரந் தோற்றி, மும்மையி னொன்றாய்
நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி,
ஐயிரு குற்றமு மகற்றியம் மாட்சியோடு
எண்ணான் குத்தியி னோத்துப் படலம்,
என்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை.
விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.
—நன்னூல்

* "வினை யினீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்." —நன்னூல்

† முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும் —நன்னூல்

‡ இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும் —நன்னூல்

* "எழுவகை மதமே: உடன்படன், மறுத்தல்,
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே,
தாஅ னாட்டித் தனாது நிறுப்பே,
இருவர் மாறுகோ ளொருதலை துணிவே,
பிறர்நூற் குற்றங் காட்ட, லேனைப்
பிறிதொடு படாஅன் றன்மதங் கொளலே,"
—நன்னூல்.

† "நுதலிப் புகுதல், ஒத்துமுறை வைப்பே,
தொகுத்துச் சுட்டல், வகுத்துக் காட்டல்,
முடித்துக் காட்டல், முடிவிடங் கூறல்,
தானெடுத்து மொழிதல், பிறன்கோட் கூறல்,
சொற்பொருள் விரித்தல், தொடர்சொற் புணர்த்தல்,
இரட்டுற மொழிதல், ஏதுவின் முடித்தல்,
ஒப்பின் முடித்தல் மாட்டெறிந் தொழுகல்,
இறந்தது விலக்கல், எதிரது போற்றல்,
முன்மொழிந்து கோடல், பின்னது நிறுத்தல்,
விகற்பத்தின் முடித்தல், முடிந்தது முடித்தல்,
உரைத்து மென்றல், உரைத்தா மென்றல்,
ஒருதலை துணிதல், எடுத்துக் காட்டல்
எடுத்த மொழியி னெய்த வைத்தல்,
இன்ன தல்ல திதுவென மொழிதல்,
எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல்,
பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்,
தன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல்,
சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்,
ஒன்றின முடித்தல், தன்னின முடித்தல்,
உய்த்துணர வைப்பென உத்திஎண் ணான்கே."
—நன்னூல்.

வேண்டு மென்றும், பலஜாதிப் பொருள்களைப் படலங்களாக விரிக்கவேண்டு மென்றும், அப்படலங்களில் ஒவ்வொரு பாவும் சில சொற்களால பல பொருள்களை விளக்கிச் சிறக்கவேண்டு மென்றும், அங்ஙனம் எழுதிய நூல்களுக்குத் தக்க உரையாசிரியர்கள் ஏற்பட வேண்டு மென்றும் மேலோர் மொழிவர். இலக்கிய ஏற்ற ஆராய்ச்சிக்குச் சிறப்புக் கருவிகளாய் விளங்குவனவாம் சில நமது இலக்கியத்தில் நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களின் உரைகளே.

நூல் * என்பது அகத்தில் மனக்கோட்டத்தை நீக்கி புறத்தில் அணிந்து விளங்கத்தக்க ஆடைக்கு மூலாதாரம் போல் நிற்பது. ஆகையால் ஒரு கடையிலுள்ள சாமான்களும், அவற்றின் விலைவிசேடங்களும் தொகுத்துக் காட்டும் விளம்பரங்கள் எவ்வளவு பெரிதாயினும் நூலாகா. கற்களைக் குவிக்கும் குவியல்கள்போல், விடயங்களைக் குவித்தால், நூல் உண்டாகாது. நூல் என்பது உயிருள்ளது. அது பிரமன் செய்த நமதுடம்பினும் வலியதாய் என்றும் அழியாது நிற்கக்கூடிய உடம்பாம். இத்தகைய நூல்களே பெரும்பாலும் இலக்கிய ஆராய்ச்சிக்குச் சிறப்புக் கருவிகளாகும்.

5. சில பொது முறைகள்.

தமிழ் நூலாசிரியன், ஒரு பள்ளி மாணுக்கன்போல் வியாசம் எழுதுவோ னல்லன். ஒரு பள்ளிப் பிள்ளையின் வியாசம் எத்துணைப் பக்கங்கள் அமையினும் தமிழில் நூல் எனப் பட்டம் பெறத் தகாததேயாம். ஏனெனில், தமிழில் நூல் எழுதுவோன் ஆசு,மதுரம்,சித்திரம், விஸ்தாரம் எனும் பகுதிகளில் ஒன்றில் சேரத் தக்கவனாய் இருப்பான். அங்ஙனம் யோக்கியதை அமையாதான் முற்காலத்தில் நூல் எழுத முன்வரான்; தற்காலத்திலோ "விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்து பாடித் தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகள்" பலர் உளர். இத்தன்மையோரே, புலவரென்று தேசமெங்கும் திரிகின்றார். முற்கால நூலாசிரியர்களுக்கு ஒப்பிடுவதற்குத் தற்காலத்திய கவிவாணர் கிடைப்பதரிதாய் விட்டது. முற்காலத்திய நால்வகைக் கவிகளில், ஆசுகவி என்பவன் காளமேகத்தைப்போல் எமகண்டத்திலும் பாடக்கூடியவனா யிருப்பான். "மூச்சுவிடும் முன்னே முன்னூறும் நானூறும்" "அம் என்னும் முன்னே ஐந்நூறும் அறுநூறும்" பாடக் கூடியவனென்று மேலோர் கூறுவர். காளமேகம், திருமலைராயனுக்கு அனுப்பிய சீட்டுக்கவியில்:—

"தூது, ஐந்து நாழிகையில், ஆறு நாழிகைதனில்
சொற்சந்தமாலை, சொல்லத், துகளிலா அந்தாதி,
எழு நாழிகைதனில் தொகைபட விரித்துரைக்க,
பாதஞ்செய் மடல்கோவை பத்து நாழிகைதனில்,
பரணி, ஒருநாள் முழுதுமே, பாரகா வியமெலாம்
ஓரிருதினத்திலேபகரக்கொடி கட்டினேன்" என்றான்.

இவனே தமிழ்ப் புலவர்களில் கடையில் எடுத்துக் காட்டக்கூடிய ஆசுகவி. சங்கத்திலிருந்த நக்கீரர் முதலானோர் ஆசுகவிகளே. நக்கீரரும் தமிழறியும் பெருமாளும் செய்த கவிவாதங்களை உற்றுநோக்கின் அக்காலத்தில் கவிவாணர் முற்றும் ஆசுகவிகளென்றே அனுமானிக்கலாம். கூறும் விடயம் முரணாகாது நினைத்தவுடனே காவிய இலக்கணம் பிறழாது பாடுவது ஆசுகவியாம். எனவே, சொற்றிருத்தம், பொருட்டிருத்தம், யாப்புத்திருத்தம், துரிதம் இந்நான்கு இலக்கணங்களையும் பொருந்தியது ஆசுகவி என்க. சங்க காலத்திற்குப் பின்னர்ச் சைவத்திருமுறைகள் பாடிய நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் ஆசுகவிக ளென்பதற்கு ஐயமில்லை. பதினோராம் நூற்றாண்டில் வசித்த கம்பன் ஒட்டக்கூத்தன்.* புகழேந்தி, அக்காலத்திய ஔவை† முதலானோர் ஆசுகவிகள் என்பதற்கும் ஆதாரவுகள் உள.

கம்பன் காலத்திற்குப் பின்னர் ஆசுகவிகளான நூலாசிரியர் மிகவும் அரியரே. தமிழ்நாட்டைத் தெலுங்கர் கைப்பற்றிய பின்னர் வெளிவந்த அருணகிரிநாதர், பட்டணத்துப்பிள்ளை முதலானோர் அத்திமரம் பூத்தது போல் நூற்றாண்டுக்கு ஒருவரைக் கண்ணுறலரிதாயிற்று. காளமேகம் காலத்து ஆசுகவி, ஏசுகவியாய் முடிந்தது. தற்காலத்தில் ஆசுகவிக்குத் தக்க பழக்கங்கள் அற்றுப் போயின. ஆதலால், இருபதாவது நூற்றாண்டில் வரகவியாய்ப் பிறப்போரன்றி ஏனையோர்க்கு ஆசுகவி ‡ என்பது ஏலாது.

மற்றொரு வகைக் கவி தற்காலத்தில் தடையின்றிப் பரவக்கூடியது $ மதுரகவியாம். காதுக்கு இனிமையாய்ப் பாடுவது, இதற்கு இன்றியமையாத தன்மை. எனவே இசைத்தமிழிலும் வழங்கக் கூடியதாய் விளங்குவது. மதுரகவி ஆழ்வாரினும் மதுரமான பாக்கள் மற்ற ஆழ்வார்களின் பிரபந்தங்களிலும் உள. ஆயினும், ஏனைய கவிகளில் அடங்காமற் சொல்லும் பொருளும் அளவற்ற சுவை கொடுக்குமாயின் அக்கவியை மதுரகவியென்று நாம் கொள்ளவேண்டும். மதுரகவி மற்றைய வகுப்புக்களில் பொருத்தக் கூடுமாயின் அவ்வகுப்பின் நாமத்தையே கொடுத்தல் சிறப்பாம்.

ஒருகவி, மதுரகவியா யிருப்பதற்குக் காரணம் பல உள. ஓசை பொலிதலே அதன் முதற்காரணம். வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்கள் அபிப்பிராயத்திற்குப் பொருந்தும்படி ஓசை யெழும் வண்ணம் கலக்கவைத்துப் பாடுவது மதுரத்தை உண்டாக்கும். (உதாரணம் — திருஞான சம்பந்தர் திருச்சிற்றேமம் ஸ்தலத்தில் பாடிய தேவாரத்தில் காண்க). இரண்டாவது, எதுகை ஒரு அடி யிலேயே ¶பற்பல விகற்பங்களோடு வருவது. மூன்றாவது தாமதச் செய்கை அல்லது தாமச குணங்கள் காட்டுங் கடுஞ் சொற்கள் கலவாமை. நான்காவது, பண்களில் மாலைப்பண்களும் ஸ்ரீராகங்களும் பொருந்தக் கூடியதாய் விளங்கல். இக்கவியில் பெரும்பாலும் உருவக அணியே பொருந்தும். வஞ்சப் புகழ்ச்சி முதலான அணிகள் மதுரத்தை விகற்பப் படுத்தும்.

கவிகளின் மூன்றாவது இனம் சித்திரக்கவியாம். சித்திரம் என்பதுசொல்லணியில் ஒரு வகுப்பென இலக்கண விளக்கம் கூறுமாயினும், நூதன ஆராய்ச்சியில் புகுந்தோர் சித்திரம் இருவகைத்தென்றும் அவை சொற்சித்திரம் என்றும் பொருட் சித்திரம் எனவும் மொழிவர். சொற் சித்திரம்* தண்டி யலங்காரத்தில் வகுத்துள்ள கோமூத்திரிகூட சதுக்கம், மாலை மாற்று முதலியவற்றினை இலக்கணங்களிற் காண்க.

பொருட்சித்திரம் சொல்லால் வெளியாகாது.சொற்றொடர்களின் பொருள்களால் வெளியாய்ப் புறம்பாய் நிற்பதாம். உதாரணம்:—

"நிலையிலா வூர்மூன் றொன்ற நெருப்பரி காற்றம் பாகச்
சிலையுநா ணதுவு நாகங்கொண்ட தேவர் தங்கள்
தலையினற் றரித்த வெண்புத் தலைமயிர் வடமும் பூண்ட
விலையிலா வேடர் வீழி மிழலையுள் விகிர்த னாரே."
(திருநாவுக்கரசு நாயனார்-திருவீழிமிழலை-திருநேரிசை 4)

இக்கவியில் அப்பர் எண்ணாத பொருட் சித்திரங்கள் சொற்றொடர்களில் எழுகின்றன. அவையாவன:—

நிலையிலாவூர்—ஒன்ற, ஊர் மூன்று ஒன்ற, நெருப்பரி-காற்று, சிலை, நாண்-நாகம். நாகங்கொண்டவர் தேவர் இவை கவி விடயத்திற்குப் புறம்பாயினும் சுயேச்சையாய் ஆங்காங்கு எழுஞ் சித்திரங்களாம். அப்பர் தேவாரத்தில் எண்கள், எழுத்துக்க ளிவைகளைச் சித்திரமாகக் காணலாகும் அங்ஙனம் அவர் எழுதியது உரையிற் கோடல் என்னும் உத்தியின்பாலதே?

†வித்தாரக்வி இருவகைத் தென்றும் அவ்விரு பகுதிகளும், எண்ணிறந்த உட்பிரிவுகள் உடையனவென்றும் புலவர் கூறுவர். ஆயினும் வித்தாரகவி என்பது உலகவழக்கில் அளவற்ற செய்யுள்களைச் செய்பவன் என்னும் பொருளைக் கொடுக்கும். அளவு மாத்திரமன்று இக்கவிக்கு ஏனைய நிற்பந்தங்களும் உள. பாட்டியலில் ‡ கூறும் விதிகளுக்கும் கட்டுப்பட்டுக் காவியங்கள் முதலிய எழுதுவோர் வித்தார கவிகளாவர். கம்பன் முதலானோர் வித்தார கவிகளாம்.

ஆகவே நூல் எழுதப் புகுவோன் தான் எத்தகைக் கவி என்று ஆராய்ந்து உணராமல் நூலெழுதப் புகுதல், முன்னோர்நூலுக்கு முரணாகும். இக்காலத்திலும் செய்யுள் உருவத்தில் ஒருவன் ஒருநூல் வெளிப்படுத்தப் புகுவானாயின் தான் எவ்வகுப்பிற் படுவானென்று எண்ணாது எழுதுதல் இன்னாததேயாம்.

E. T. சோக்கம்மாள்.

---

* "அவற்றுள் நூலெனப் படுவது
முதலு முடிவு மாறுகோ ளின்றித் [காட்டி
தொகையினும், வகையினும், பொருண்மை
நுண்ணின் நகன்ற வுரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே."
(தொல்காப்பியம்.)

* (உ-ம்) ஈட்டி - எழுவது.

† ஔவை என்னும் நாமமுடைய கவிகள் நமதிலக்கியத்தில் பலர் உளர். ஒருவர் இடைச்சங்க காலத்தினர். ஒருவர் திருவள்ளுவ நாயனார் தமக்கை. மற்றொரு ஔவை சுந்தரமூர்த்தி நாயனாருடன் கைலாயம் சென்றவள். இன்னும் பல ஔவைகளும் உளர்.

‡ "எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு, இவையின்
விழுத்தக ஒருவன் விளம்பிய உள்ளுரை
அப்பொழுது உரைப்பது ஆசுகவியே."
(இலக்கண விளக்கம் § 764.)

$ சொல்லும் பொருளும் சுவைபட நிறீஇச்
செல் வழித் தொடையும் விகற்பமும் செறீஇ
உள்ளத்துள்ளே கொள்ளும் அழுதென
தன்மை உவமை பின்வரு பெற்றியின்
உருவக முதலுற்று ஓசை பொலியப்
பாடுதல் மதுர கவியெனப் படுமே.
(இலக்கண விளக்கம் § 765.)

¶ "ஊனுயி ரானா யுடலானா யுலகானாய்
வானாய் நிலனாய் கடலானாய் மலையானாய்
தேனார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் [நல்லூரருட் டுறையுள்
ஆனாயுனக் காளாயினி யல்லேனெ னலாமே
(சுந்தரமூர்த்தி நாயனார்-தேவாரம்).
"கையிலங்கிய வேலினர் தோலினர் கரிகாலினர்"
—திருஞான சம்பந்தர்.

* "கோமூத் திரியே கூட சதுக்க
மாலை மாற்றே மாத்திரைச் சுருக்க
மாத்திரை வருத்தன மெழுத்து வருத்தன
மொற்றுப் பெயர்த்தல் வினாவுத் தரமே
நாக பந்த முரச பந்தச்
திரிபாதி திரிபங்கி பிறிதுபடு பாட்டுக்
காதை கரப்பே கரந்துறைச் செய்யுள்
சக்கரஞ் சுழிகுளஞ் சருப்பதோ பத்திர
மக்கரச் சுதக நிரோட்ட மென்ன
முறைபெற வகுத்த மிறைக்கவி யிருபது
மறிவறக் கிளந்த வவற்றின் பால."
(இலக்கண விளக்கம் § 690.)

† "வித்தார கவியை விளம்புங் காலை
யுத்திறத் தொடர்நிலை யடிபல நடக்குந்
தனிப்பா வென்னத் தானிரண் டாகும்."
—இலக்கண விளக்கம் ‡ 767

‡ "மங்கலஞ் சொற்பால் வருண முண்டி
தானமக் கரக்க டப்பாக் கதிகண
மான வீரைந்து மம்முதற் சீர்க்குப்
பொருத்த மென்னத் தெரித்தனர் புலவர்"
—ஷை 770.

189003

தமிழ்ப் பாடம் 20.

நள வெண்பா

(371-வது பக்கத் தொடர்ச்சி)

சுயம்வர காண்டம்.

கொள்ளைபோ கின்ற துயிரென்னுங் கோளரவின்
முள்ளெயிறோ மூரி நிலவென்னும்—உள்ளம்
கொடிதிரா வென்னுங் குழையுந் தழல்போல்
நெடிதிரா வாய்புலரா நின்று. 95.

பொழிப்புரை:—தமயந்தி, என்னுயிர் கொள்ளை போகின்றதே என்பாள். கொலைசெய்யும் பாம்பின் கூரிய பல்தானோ இவ்வலிய நிலவு என்பாள். இவ்விரவின் மனம் அதிகம் கொடியது, என்பாள். நெடுநேரம் சும்மா இருந்து வாய்உலர்ந்து நெருப்பைப்போல் குழைவாள்.

வெங்கதிரோன் றன்னை விழுங்கிப் புழுங்கியோ
கொங்கை யனலிற் கொளுந்தியோ—திங்கள்
விரிகின்ற வெண்ணிலவால் வேகின்ற தேயோ
எரிகின்ற தென்னோ விரா. 96.

பொழிப்புரை:—"சூரியனை விழுங்கியிருப்பதால் புழுங்குகின்ற காரணத்தினாலோ, அல்லது என் கொங்கையிலிருந்து வீசுகின்ற அனலில் பொசுங்கியோ, அல்லது சந்திரனிடத்திலிருந்து விரிகின்ற வெண்மையான நிலவினால் வேகின்ற காரணத்தினாலோ, எதனால் இந்தஇரவு இவ்வாறு எரியலாயிற்று." என்பாள் தமயந்தி.

ஊழி பலவோ ரிரவாயிற் றோவென்னும்
கோழி குரலடைத்த தோவென்னும்—ஆழி
துயிலாதோ வென்னுஞ் சுடர்மதியங் காய்ந்த
வெயிலா லுடலுருகா வீழ்ந்து. 97.

பதப்பிரிவு:—ஊழி பல ஓர் இரவு ஆயிற்றோ என்னும் கோழி குரல் அடைத்ததோ என்னும் ஆழி துயிலாதோ என்னும் சுடர் மதியம் காய்ந்த வெயிலால் உடல் உருகா வீழ்ந்து.

அன்வயம்:—சுடர்மதியம் காய்ந்த வெயிலால் உடல் உருகா வீழ்ந்து, ஊழிபல ஓர் இரவு ஆயிற்றோ என்னும்.

கோழி குரல் அடைத்ததோ, என்னும். ஆழி துயி லாதோ என்னும்.

பதவுரை.

சுடர் - தீச்சுடர் போன்ற
மதியம் - சந்திரன்
கான்ற - வீசிய
வெயிலால் - வெய்யிலினால்
உடல் - உடல்
உருகா - உருகி
வீழ்ந்து - விழுந்து,
"ஊழி பல - அனேக யுகங்கள் ஒன்றாய்ச் சேர்ந்து
ஓர் - இந்த ஒரு
இரவு - இரவாக
ஆயிற்றே - ஆயினதோ"
என்னும் - என்பாள்.
"கோழி - யாமக்கோழி
குரல் - குரல்
அடைத்ததோ - அடைத்துக் கிடக்கின்றதோ"
என்னும் - என்பாள்.
"ஆழி - கடலானது
துயிலாதோ - தூங்காதோ"
என்னும் - என்பாள்.

விரிவுரை:—பொழுது விடிந்ததும் சுயம்வரம் ஆதலால் அவ்விரவு தமயந்திக்கு எளிதில் கழியமாட்டேன் என்று வளர்வதாயிற்று. ஆதலால் இங்கு இரவைப் பழிக்கின்றாள். இரவு விடியாததற்குக் கோழி கூவாததே காரணம் என்று நினைத்தவள்போல்'கோழிகுரல் யடைத்ததோ' என்று கோழியையும் வைகின்றாள். பிள்ளைமீன் புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை காதலால் பேதுற்று இவ்வாறு ஏசுவது இயற்கையே. காமநோய் உற்றவர்கள் கடலொலிகேட்க மேன்மேலும் வருந்துவர். நள்ளிரவிலும் ஓயாது ஒலித்துக்கொண் டிருக்கின்ற கடல்தான் தூங்கிக்கிடக்க மாட்டேன் என்கிறதே என்று இரங்குகிறாள்.

குறிப்பு:—ஓ, என்பது ஒரு இடைச்சொல் லென்றும் அது வேறு சொற்களோடு சேர்ந்து பலபொருள்கள் தருமென்றும் முன்னே (369-வது பக்கம்) சொன்னேன். இங்கு, இரவாயிற்றே, அடைத்ததோ, துயிலாதோ என்று வருகின்ற ஓகாரங்கள் மூன்றும் இரக்கப் பொருளைத் தருவன. இரக்கம், என்பது கூறுவோர் படுகின்ற வருத்தத்தைக் காட்டுவது. ஆதலால், ஓகார இடைச் சொல்லிற்கு அங்குக் காட்டிய வினா, ஒழியிசை, ஐயம், இழிவு, எதிர்மறை என்னும் பொருள்களோடு இந்த இரக்கப் பொருளையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

முன், 96-வது செய்யுளில், புழுங்கியோ, கொளுந்தியோ, வேகின்றதேயோ, என்ற இடங்களில், இரவு எரிவதற்கு இவை மூன்றினில் எது காரணமாயிருக்கலாம் என்னும் சந்தேகத்தைக் காட்டுகின்றபடியால் அவை ஐயப் பொருளில் வந்திருக்கின்றன.

2. என்னும் என்பது வினைமுற்று. இவ்விதம் உம் என்று முடிகின்ற வினைமுற்றுக்களை மனிதரோடு சேர்த்துச் சொல்லுகிற வழக்கம் சாதாரணமாக இல்லை. கிளி பேசும், குதிரை ஓடும், மரம் வளரும்,மலை நிற்கும், என்று மிருகங்கள் உயிரில்லாத பொருள்கள் இவைகளோடு சேர்த்தே உம் என்று முடிகின்ற வினைமுற்றை உபயோகிக்கப் பார்த்திருப்பீர். ஆனால் மனிதர்களுக்கும் அந்தவித வினைமுற்றை உபயோகிப்பது பிழையல்ல. முனி உறும். தமயந்திமாலை சூட்டும். நளன் தூது போகும்,என்று சொன்னாலும் முனி உறுவான்,தமயந்தி மாலை சூட்டுவாள், நளன் தூது போவான், என்ற அர்த்தத்தையே அவை தரும். செய்யுளில் சாதாரணமாகச் செய்யும் என்ற வாய்பாட்டு வினைமுற்று, மனிதர்களுக்கும் மற்றவைகளுக்கும் பொதுவாய் வருமாதலால், அவ்வாறு வந்த இடங்களில் சந்தேகங்கொள்ளவேண்டா.

3. உருகா என்பது உருகி என்னும் உடன்பாட்டுப் பொருளில் வந்த வினையெச்சம் என்பதை எளிதில் கண்டுகொள்வீர்.

ஆடி வரிவண் டருகே பறக்கவே
வாடி மெலிவாள் வனமுலைமேல்—ஓடிப்
பொறையாகச் சோர்வாள் பொறுக்குமோ காமத்
துறைவா யடங்காத் துயர். 98.

கருத்து:—வண்டுகள் அருகே பறந்த காற்றுப்பட்டாலும் வாடுபவளும்,தன் முலையின் பாரமே தாங்கமாட்டாமல் சோர்பவளும் ஆகிய மிருதுத் தன்மை வாய்ந்த தமயந்தி இக்காமநோயை எப்படிப் பொறுப்பாள் பாவம், என்று கவி இரங்குகின்றார்.

ஈர மதியே யிளநிலவே யிங்ஙனே
சோர் குழலின்மீதே சொரிவதெவன்—மாரன்
பொரவளித்தான் கண்ணி யுனக்குப் புலரா
இரவளித்தா னல்லனோ வின்று. 99.

பதப்பிரிவு:—ஈர மதியே இள நிலவே இங்ஙனே சோர் குழலின் மீதே சொரிவது எவன் மாரன் பொர அளித்தான் கண்ணி உனக்கு புலரா இரவு அளித்தான் நல்லனோ இன்று.

அன்வயம்:—ஈரமதியே இங்ஙனே சோர்குழலின் மீது இளநிலவு இங்ஙன் சொரிவது என்! உனக்கு இன்று பொரக்கண்ணி அளித்தான் மாரன்,(நல்லனோ) (உனக்கு இன்று பொர) புலரா இரவு அளித்தான் (சூரியன்) நல்லனோ?

கருத்து:—இதுவும் கவி கூறுவது. அவரும் தமயந்தி படுகின்ற துன்பத்தைப் பார்க்கச் சகியாது, அவளோடு சேர்ந்துகொண்டு சந்திரனையும் மன்மதனையும், இரவை அகற்றவராமல் காலம் தாழ்க்கின்ற சூரியனையும் வைகின்றார்.

பதவுரை.

ஈர - குளிர்ந்த
மதியே - சந்திரனே,
சோர் - சோர்கின்ற
குழலின்மீது - கூந்தலையுடைய தமயந்தியின்மீது
இளநிலவு - இளநிலாவை
இங்ஙன் - இப்படி
சொரிவது - சொரிவது
எவன் - என்ன காரணம்? (உனக்கிது அழகல்ல). ஆனால் உன்னைச்சொல்லி என்னபயன்!
இன்று - இன்றையதினம்,
பொர - (மயில்போன்ற தமயந்தியை வேட்டையாடிப்) போர் செய்ய
உனக்கு - உனக்கு
கண்ணி - வலைபோன்ற நிலவை
அளித்தான் - கொடுத்தவனாகிய
மாரன் - மன்மதனோ (அல்லது)
புலரா - (நெடுநேரம் நீ போர் செய்யும் பொருட்டு) விடியாத
இரவு - இராக்காலத்தை
அளித்தான் - (உனக்கு) கொடுத்தவனாகிய சூரியனோ
நல்லன் - நல்லவன், என்று நினைப்பது.

விரிவுரை:—"சந்திரனே, நீ ஈரமதியாயினும் உனக்கு ஈரமதி இல்லை. (ஈரமதி-குளிர்ந்த சந்திரன், கருணையோடு கூடிய மனம்)இப்படி யேன் உன்நிலவை எல்லாம் புள்ளியும் மெல்லிய தன்மை வாய்ந்த இத்தமயந்தியின் மேலேயே பொழிந்து ஒழிகின்றாய். நீதான் இப்படி என்றால், மயில் போன்ற பெண்களைப் பிடிக்க நிலவென்னும் வலையை உனக்குத்தந்து வைத்தானே அந்த மன்மதனைத்தான் நல்லவன் என்பேனோ! அல்லது விடியாத இரவை உனக்குத்தருகின்ற சூரியனைத்தான் நல்லவன் என்பேனோ!" என்று கவியே தன் கதையுடன் கலந்து கொண்டு தமயந்திக்காகப் பரிகின்றார்.

தாங்கு நிலவின் றழல்போய்த் தலைகொள்ளத்
தேங்குழல்சேர் வண்டு சிறைவெதுப்ப—
[ஓங்குயிர்ப்பின்
தாமங் கரியாத் தனியே தளர்கின்றாள்
யாமங் கரியாக வின்று. 100

பொழிப்புரை:—தாங்கியநிலவின் நெருப்புப்போய்த் தலையேறிவிட்டபடியால், மணம்பொருந்திய அவள் கூந்தலையடைந்த வண்டுகளின் சிறகுகள் வெந்து போகவும், பெருமூச்சு விடுவதால் அதன் வெப்பம்பட்டுப் பூமாலைகள் கரிந்துபோகவும், தன்னந்தனியாய்த் தான் படும் துயரிற்கு அந்நள்ளிரவே சாக்ஷியாய் இன்று தமயந்தி சோர்கின்றாள்.

மையுற்ற கண்ணருவி வார வளைசோர
கையிற் கபோலத் தலம்வைத்து—மெய்வருந்தித்
தேனிருந்த பூங்கணையே தீயாகத் தேமொழியாள்
தானிருந்து செய்தா டவம். 101.

பொழிப்புரை:—மை இட்ட கண்களிலிருந்து நீர் அருவிபோல் பொழியவும், வளைகள் நழுவவும், கையைக் கன்னத்தில் வைத்தும், மெய்சோர்ந்தும், தேன் இருந்த மன்மத பாணங்களே தீயாகவும், இனிய மொழியுடைய தமயந்தி நளனைக் குறித்துத் தவம் செய்வாள்போல் இருந்தாள்.

அள்ளிக் கொளலா படையத் திரண்டொன்றாய்க்
கொள்ளிக்கும் விள்ளாத கூரிருளாய்—உள்ளம்
புதையவே வைத்த பொதுமகளிர் தங்கள்
இதயமே போன்ற திரா. 102.

வேசியர்களது உள்ளத்தைப்போல் பொருளொன்றும் தெரியாமல் இருண்டிருந்தது அவ்விரவென்பது கருத்து.

ஊக்கிய செல்ல ரொலிக்குத் துடிக்குரலர்
வீக்கிய கச்சையர் வேல்வாளர்—காக்க
இடையாமங் காவலர்கள் போந்தா ரிருளின்
புடைவா யிருள்புடைத்தாற் போன்று. 103.

நள்ளிரவில் ஊர்க்காவலர் பறையொலி எழுப்பி நகரியிற் செல்வதை இச்செய்யுள் குறிக்கின்றது.

சேமங் களிறுபுகத் தீம்பாலின் செவ்வழியாழ்
தாமுள் ளுறைபுகுதத் தார்வண்டு—காமன்றன்
பூவாளி யைந்திற் புகத்துயில் புக்கதே
யோவாது முந்நீ ருலகு. 104.

யானைமுதல் வண்டுகள் ஈறாக அவ்விரவில் யாவும் நித்திரையி லமர்ந்தன,

ஊன்றின் றவகையா னுள்ள வுயிர்புறம்பே
தோன்றாங் கழுதுந் துயின்றதே—தான்ற
னுரைசோரச் சோர வுடல்சோர வாயி
னிரைசோரக் கைசோர நின்று. 105.

பேய்களும் அதுவது நின்ற இடத்தில் அங்கங்குத் தூங்கலாயின.

அன்றி லொருகண் டுயின்றொருக ணார்வத்தா
லின் றுணைமேல் வைத்துறங்கு மென்னுஞ்சொ
—லின்று
தவிர்ந்ததே போலாற்றிச் சாம்புகின்ற போதே
யவிழ்ந்ததே கண்ணீ ரவட்கு. 106.

பதப்பிரிவு:—அன்றில் ஒரு கண் துயின்று ஒரு கண் ஆர்வத்தால் இன் துணைமேல் வைத்து உறங்கும் என்னும் சொல் இன்று தவிர்ந்ததே போல் ஆற்றி சாம்புகின்ற போதே அவிழ்ந்ததே கண் நீர் அவளுக்கு.

பதவுரை.

அன்றில் - ஆண் அன்றில் பறவையானது
ஆர்வத்தால் - (பெடையின் மீதுள்ள) ஆசையால்
ஒருகண் - தனது கண்களில் ஒன்று
துயின்று - துயில,
ஒரு கண் - மற்றொரு கண்ணை
இன் - தனது இனிய
துணைமேல் - பெடையின்மீது
வைத்து - வைத்துக்கொண்டு
உறங்கும் - உறங்குவதாகும்,
என்னும் சொல் - என்று உலகத்தோர் சொல்வது
இன்று - இன்றையதினம்
தவிர்ந்ததேபோல் - பொய்யாய் விட்டதுபோல்
ஆற்றி - (அப்பெட்டை யன்றில்) கதறி
சாம்புகின்றபோதே - அழிந்தவுடனே
அவட்கு - தமயந்திக்கு (அக்குரலைக் கேட்க)
கண்நீர் - கண்களினின்று ஜலம்
அவிழ்ந்தது - வழியலாயிற்று.

விரிவுரை:—காமநோய் அடைந்தவர்கள் பொறுக்க முடியாதவைகளில் அன்றிலின் குரல் ஒன்று. அவ்விரவிலே அன்றில் கூவ அக்குரலைக் கேட்டுத் தமயந்தி பெரிதும் வருந்தினாள். அந்த அன்றில் ஏன் கூவியிருக்கலாம் என்பதற்கும் கவி ஒரு காரணம் கற்பிக்கின்றார். ஆண் பெண் அன்பு அன்றிற் பறவைகளுக்குள் வெகு அதிகம். மற்றப் பக்ஷிகளைப்போல் அவை அவ்வக்காலத்தில் கூடிக் குஞ்சுகள் வளர்ந்தவுடன் பிரிந்து விடுவதில்லை. ஆயுள்வரையிலும் ஒரே ஆணும் பெண்ணும் விவாகமானாற்போல் கூடிவாழும். இவ்வாழ்க்கையில் ஒரு நிமிட நேரமும் பிரிந்திருக்கச் சகியா. இந்த அன்பை ஆதாரமாக வைத்துக்கொண்டு கவி இங்கு ஒரு விநோதம் கற்பிக்கின்றார். தூங்குகின்ற காலத்திலேயும் ஆணன்றில் ஒரு கண் தூங்கி இன்னொரு கண்ணால் தன் பெடையைப் பார்த்துக் கொண்டிருக்கும் என்பது உலகறிந்த விஷயமாம்.பெண் அன்றிலும் ஒரு கண் தூங்கி மற்றொரு கண்ணால் ஆணன்றில் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றதோ வென்று பார்த்திருக்குமோ என்னவோ! ஆணன்றில் தூக்கமயக்கத்தால் ஒருபோது தன்னிரு கண்களையும் மூடிவிட நேருமாயின்,உடனே அப்பெடை, "இவ்வளவுதானோ இதற்கு என்மேல் இருந்த ஆசை" என்று கதறிச் சோருமாம்.இப்படி யொரு அன்றில் அரற்றக் கேட்டுத் தமயந்தி கண்ணீர் வடித்தனள்.

கம்ப ராமாயணம்

பால காண்டம்

4. அரசியற் படலம்.

[376-ம் பக்கத் தொடர்ச்சி]

உலக மன்னர்க் குயிரீவா ரிலரோ.

உடலையும் உயிரையும் வேறுவேருய்க் கருதாமல் அவ்விரண்டும் ஒன்ருய்ச் சேர்ந்தே ஒருவனை ஒருவன் என்று நாம் நினைக்க நேர்வதுபோலவே, மன்பதைத் தொகுதியும் மன்னவனும் இரண்டற ஒன்ருய்க் கலப்பது கம்பர் கண்ட அரசியல் தத்துவம். அவ்விரண்டினுள் ஏற்றமாய உயிரின் நிலையினைச் சனங்களுக்கே தந்து தயாதனை உடலே என்றும் உரைத்தனர். இந்த விதம் தயாதன் உடம்பாதல் தனது கோசலமெனும் நாட்டினிலடங்கிய உயிர்களுக்கு மாத்திரமன்று, மானுட உயிர்களுக்கு மாத்திரமுமன்று. உலகடங்கலும் வாழ்கின்ற சராசரங்கள் அனைத்திற்கும் உடலாயினன்.

இன்னவாறு கம்பர் தயாதனைக் கூறியது, தோலாமொழித்தேவர் சூளாமணியில் வருணித்த பயாபதி வேந்தனின் பெருமையின் சிறுமையைக் காட்டுதற்கென்று எண்ணலாகாதெனினும், அச்சூளாமணிச் செய்யுள் இப்பாசுரம் பாடும்போது இவரது நினைவில் இருந்திருக்கலாம். தோலாமொழித் தேவர்,

மற்றமா நகருடை மன்னன் றன்னுயர்
ஒற்றைவெண் குடைநிழ லுலகிற் கோருயிர்ப்
பெற்றியான் பயாபதி யென்னும் பேருடை
வெற்றிவேன் மணிமுடி வேந்தர் வேந்தனே.

[அந்தப் போதனம் என்னும் சிறந்த நகரத்தினுடைய மன்னவன், வெற்றி பொருந்திய வேலாயுதத்தையும் இரத்தின கிரீடத்தையும் உடைய அரசர்களுக்கெல்லாம் அரசனுகிப் பயாபதி என்னும் பேருடையவன். அவன், தனது உயர்ந்த ஒப்பற்ற வெண்மையான குடையின் நிழலில் வாழ்கின்ற பிரஜைகளுக்கு ஓர் உயிர்போன்ற தன்மையை யுடையவன்]

என்று அரசனை உயிராகக் கூற அது, கம்பரை யறியாமலே இங்கு உடலாக மாறியதென்று சொல்வதற்கு மில்லை. ஏனெனில், பின் அயோத்தியா காண்டத்தில் மறுநாள் மன்னனுவான் நின்ற இராமனுக்குக் கோயியலெடுத்துரைத்த வசிட்டமுனிவன்,

வைய மன்னுயி ராகவம் மன்னுயிர்
உய்யத் தாங்கு முடலன்ன மன்னனுக்
கைய மின்றி யறங்கட வாதருள்
மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ

[சந்தேகமில்லாது அறம்பிறழாமல் அருள் என்னும் தத்துவத்தைக் கடைபிடித்து நின்றபின், பூவுலகிலுள்ள ஜீவராசிகளெல்லாம் உயிராக, அவ்வுயிர் உய்ந்து கடையேறும் வண்ணம் அதனைத் தாங்குகின்ற உடல்போன்ற அரசன் பல வேள்விகள் செய்யவும் வேண்டுமோ]

மீண்டும் இக்கருத்தை எடுத்துக் கையாளுமாறு கம்பர் செய்கின்ருர். ஆதலால் அரசனை உயிராகவும் பிரஜைகளை உடலாகவும் சூளாமணி பாராட்டுவது கம்பருக்கு ஒவ்வவில்லை. உயிரில்லாக்கால் உடலழியும், ஆனல் உடலின்றி உயிர் இருத்தலுங் கூடும்.உயிருடலிரண்டினில் உயிரே பிரதானம். எனின் சூளாமணி அரசனை முக்கியமாகி உயிரின் பொருட்டே உடல் இருப்பதுபோல் அவனது பெருமைக்கும் ஆட்சிக்கும் ஆளாவதற்கே குடிகள் இருப்பதெனும் நோக்க முடையது. ஆயுங்கால் முன்னிற்குக் கூறியவாறு அரசியல் தத்துவம் அதுவன்று. பிறவிப்பயன் எய்திப் பின் உயிர் உய்வதற்கே உடல் இருப்பது போன்று, மன்பதையுலகம் அறம் பொருளின்பவீடெனும் நாற்பெரும்பேறுகளையும் அடைவதற் காதாரமாய வோர் துணைக்கருவியே தானெனும் தன்மை யறிந்த வேந்தனே தன்முறை கண்ட வேந்தனுவான். ஆதலாற்ருன், மெய்த்தவ வசிட்டன், "மன்னுயிர் உய்யத் தாங்கு முடலன்ன மன்னன்" என்று காட்டுவதாயிற்று. முத்திநிலை எய்துதலே உய்வதெனும் பேருடைத்து. அவரவர் பிறப்பிற்கியன்ற கருமங்களை ஆற்றி முத்தியிற் சேரும் வண்ணம், முன்னின்று ஒரு செல்கதி உய்க்கும் நீர்மையை முன் தயாதன்மாட்டுக் கண்டோம்.

சூளாமணிச் செய்யுளின் கருத்துக் கம்பர்பால் மறுப்புண்டதெனினும், மாந்தரை வேந்தனின் உயிர்நிலையாக்கிய இச்செய்தி கம்பரின் கற்பனை அல்லவுமல்ல. இக்கற்பனைக்கு உரிமையுடையவர் கம்பருக்கு முன்னிருந்த சீத்தலைச் சாத்தனுர் ஆவர். அவர் தம் 'மணிமேகலை'யுள், தவத்திறம் பூண்ட மாதவியின் மகள்மீது காதல் கொண்ட உதய குமரனை இடித்துரைத்த மணிமேகலா தெய்வம்,

"மன்னுயி ரெல்லாம் மண்ணுள்வேந்தன் தன்னுயிர்"

என்று செப்பிய வாக்கியம் கம்பரின் கவிக்கு முற்பட்டது. சூளாமணியின்படி அரசன் உயிரென்றும் மணிமேகலையின்படி அவன் உடலென்றும் இரு கருத்துக்கள் கம்பரின் கையருகு இருக்க அவர்,முன்னதை விடுத்துத் தன் அரசியல்கொள்கைக் கிணங்கப் பின்னதைப் போற்றிய திறம் சிறியதன்று.

நாட்டினதியலில் அரசனை ஆள்பவன் எனக் கூறுவது ஆதலால், அபவாதமே யன்றிப் பிறிதொன்றில்லை. சூளாமணி செப்பியதினின்று மாறுபட வேண்டுமெனும் நினைவினுலே கம்பர் தயாதனை உயிருலாம் உடம்பனைய தன்மையனுக்கினுரென்று எண்ணின் பிழையாம். அது வன்றி, உத்தம வேந்தனின் இலக்கணம் இதுவென்று கம்பர் இங்குக் காட்டியது காரியசாத்திய மல்லாக் கவியின் கற்பனைகளுள் ஒன்றென்றும் எண்ணவேண்டா. மற்று, அக்கவிக்குப் பொருள் காணுங்கால் மிதமிஞ்சிய ஊக்கத்தால் மிகுந்துரைத்தபரிசுமன்று. பண்டைநாளில் பாதகண்டத்தில் யாவர்தம் கருத்தும் கருமமும் அமைந்த விதம் இதுவே. இவ் 'அரசியற்' படலத்தில் மன்னன் மக்களுக்குஆற்றுங் கருமமும் அவர்கள்பால் தன்னைப்பற்றிக்கொண்டிருந்த கருத்தும் இவையாயிற்றென்று கவி அரசனது திறத்தினின்று பேசுவதாகக் கொள்ளல் வேண்டும். வேந்தர் உடலாயும் மாந்தர் உயிராயும் அமைகின்ற வாய்மையினை அம்மாந்தர்முகமாயும் விளக்குகின்ற கதையொன்று மணிமேகலையில் வந்துளது. அக்கதையினைச் சிறிது விரிவஞ்சாது இங்குச் செப்புதல் பொருத்தமுடைத்தாம் :—

காவிரிப்பூம் பட்டினத்தில் கண்ணிலாப் பார்ப்பான் ஒருவன் இருந்தான். அவன் மனைவி கோதமை என்பவளுக்கும் கண்ணிலை. இவ்விரு அந்தகராய தாயுந் தந்தையும் தம்மொரு புதல்வன் சார்ங்கலன் காப்பாற்றக் காலங் கழித்து வந்தனர். இச்சார்ங்கலன் என்னும் பார்ப்பனச்சிறுவன் ஒருநாள் அவ்வூர் மயானத்தூடே தமியனுக நடக்க நேர்ந்தனன். அங்கு,

என்புந் தடியு முதிரமு மியாக்கையென்
றன்புறு மாக்கட் கறியச் சாற்றி,

[தம் உடலினிடத்திலே அளவிறந்த ஆசைவைக்கும் மூடமாக்களுக்கு, அது எலும்பும் ஊனும் இரத்தமும் கலந்தவோர் வெறுப்புக்கிடமான வஸ்துவெனச் செப்புவதுபோல்]

வழுவொடு கிடந்த புழுலூன் பிண்டத்
தலைத்தக மூட்டிய வடிநரி வாய்க்கொண்
டுலப்பி லின்பமோ டுளைக்கு மோதையும்,

[கொழுப்பு வழியக்கிடந்த ஒரு புழுத்த பிணத்தின், செம்பஞ்சக் குழம்பூட்டிய காலை ஒரு நரி வாயில் கவ்வி மிகுந்த இன்பத்தோடு கூவுகின்ற ஓசையும்]

கடகஞ் செறிந்த கையைத் தீநாய்
உடையக் கவ்வி யொடுங்கா வோதையும்

[கடகங்கள் அணிந்த கையைச் சுடுகாட்டு நாயொன்று உடைத்துக் கவ்வி ஓயாது கூவும் ஓசையும்.]

சாந்தந் தோய்ந்த வேந்திள வனமுலை
காய்ந்தபசி யெருவை கவர்ந்து ணோதையும்

[சந்தனம் பூசியிருந்த பருத்த இள முலைகளை மிக்க பசியோடு கழுகு கவர்ந்து உண்ணும் ஓசையும்]

பண்புகொள் யாக்கையின் வெண்பலி யரங்கத்து
மண்கணை முழவ மாக,

[மார்ச்சனையமைந்த மத்தள ஒலியாக, பிணஞ் சுட்ட சாம்பல் மேட்டின் மீது]

—ஆங்கோர்,

கருந்தலை வாங்கிக் கையகத் தேந்தி
இரும்பே ருவகையி னெழுந்தோர் பேய்மகள்,

[ஒரு பெண் பிசாசு, பிணத்தின் தலையைப் பிய்த்துக் கையிலே ஏந்திக்கொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடு எழுந்து]

புயலோ குழலோ கயலோ கண்ணே
குமிழோ மூக்கோ விதழோ கவிரோ
பல்லோ முத்தோ வென்ஞு திரங்காது,

[மேகமோ கூந்தலோ, மீனே கண்ணே, குமிழம் பூவோ மூக்கோ, உதடோ முருக்கம்பூவோ, பல்லோ முத்து வரிசையோ, என்றிப்படி யெல்லாம் அப்பிணத் தலையின் உறுப்புக்களைப் பாராட்டாமல்]

கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்துத்
தண்டாக் களிப்பி னாடுங் கூத்துக்
கண்டனன் வெரீஇக் கடுநவை யெய்தி
விண்டோர் திசையின் விளித்தனன் பெயர்ந்து,

[கண்ணைத் தோண்டித் தின்று அடங்காக் களிப்புடன் தன் பிளந்த காலைத் தூக்கி (அப்பேய்) கூத்தாட, சார்ங்கலன் கண்டு பயப்படவே அப்பேயால் பிடிக்கப்பட்டவனுகி, அவ்விடம் விட்டுக் கதறிக்கொண்டு தன்வீட்டிற்கு ஓடிப்போய்]

எம்மனை காணு யீமச் சுடலையின்
வெம்முது பேய்க்கென் னுயிர்கொடுத் தேனெனத்
தம்மனை தன்முன் வீழ்ந்துமெய் வைத்தலும்,

["தாயே, காண். சுடுகாட்டிலே கொடியதோர் கிழப் பேய்க்கு என்னுயிரை கொடுத்து விட்டேன்" என்று சொல்லிக்கொண்டே அவன் அன்னையின்முன் விழுந்து இறந்து விடவே]

பார்ப்பான் றன்னெடு கண்ணிழந் திருந்தவித்
தீத்தொழி லாட்டியென் சிறுவன் றன்னை
யாருமி றமியே னென்பது நோக்கா
தாருயி ருண்ட தணங்கோ பேயோ
துறையு மன்றமுந் தொல்வலி மாறு

முறையுளுங் கோட்டமுங் காப்பாய் காவாய்
தகவிலை கொல்லோ சம்பா பதியென,

[கணவனைப்போல் கண் இழந்திருந்த அந்தத் தீவினையுடையவள், ஊர்காக்கும் தெய்வமாகிய சம்பாபதியைக் குறித் தழைத்து, "நிற்கதியாயிருப்பவள் நானென்பதையும் நோக்காது, என் மைந்தனின் உயிரைக் கவர்ந்தது தெய்வமோ, பேயோ தெரிகிலேன். நீர்த்துறைகளையும், பொது மாத்தடியிடமும், முதிர்ந்த மாமும் வீடும் கோயிலும் யாவும் காக்கின்ற தெய்வமே, சம்பாபதி, இன்று நீ என் மகனைக் காவாதது என்னவோ, கருணையென்பது நீ கண்டறிந்ததில்லையோ!" என நொந்து]

மகன்மெய் யாக்கையை மார்புறத் தழீஇ
யீமப் புறங்காட் டெயிற்புற வாயிலிற்
கோதமை யென்பாள் கொடுந்துயர் சாற்ற,

[சிறுவனின் சவத்தை அக்கோதமை என்பவள் தன் மார்போடணைத்துக் கொண்டுபோய் இடுகாட்டின் மதில் வாயிலில் கிடத்தித் தன் கொடிய துன்பத்தைக் கூறி ஓலமிட]

கடிவழங்கு வாயிலிற் கடுந்துய ரெய்தி
இடையிருள் யாமத் தென்னையீங் கழைத்தனை
யென்னுற் றனையோ வெனக்குரை யென்றே
பொன்னிற் பொலிந்த நிறத்தா டோன்ற,

[அதுகேட்டுச் சூரியனைப் போன்ற சோதியுடைய சம்பாபதிதோன்றிப் "பேய்கள் சஞ்சரிக்கும் இவ்வழியிலே நடு இரவில் கொடுந்துயர் அடைந்து என்னைக் கூப்பிட்டாய். உனக்கு என்ன உற்றது," என்று வினவ]

ஆருமி லாட்டியென் னறியாப் பாலக
னீமப் புறங்காட் டெய்தினேன் றன்னை
யணங்கோ பேயோ வாருயி ருண்ட
துறங்குவான் போலக் கிடந்தனன் காணென,

[கோதமை, "நானே ஒருவருமில்லாத் தமியள். எனது பேதைப் பாலகன் இவன் சுடலையின் வழியாகச் செல்ல, அங்கே தெய்வமோ பேயோ அவனது இனிய உயிரை உண்டுவிட்டது. இதோ, தூங்குகின்றவன் போலக் கிடக்கின்ருன் பார்" என்று மொழிய]

அணங்கும் பேயு மாருயி ருண்ணு
பிணங்குநூன் மார்பன் பேதுகந் தாக
வூழ்வினை வந்திவ னுயிருண்டு கழிந்தது
மாபெருந் துன்பநீ யொழிவா யென்றலும்.

[சம்பாபதித் தெய்வம் அவளைப் பார்த்துத் "தெய்வமும் பேயும் யாருயிரையும் கொள்ளமாட்டா. இப்பார்ப்பனச் சிறுவனின் அறியாமை காரணமாகப் பயங்கொள்ள அவனது விதியே வந்து அவனுயிரை உண்டு போயிற்றென்று நினை. ஆதலால் நீ கொண்ட இப்பெருந் துக்கத்தை ஒழிக்கவேண்டும்" என்று பதிலுரைக்கவும்]

என்னுயிர் கொண்டிவ னுயிர்தந் தருளிலென்
கண்ணில் கணவனை யிவன்காத் தோம்பிடு
மிவனுயிர் தந்தென் னுயிர்வாங் கென்றலும்

[கோதமை, "என்னுயிரை எடுத்துக்கொண்டு அதற்கு மாருக இவனது உயிரை அளிப்பாயானல், அவன் எனது குருட்டுக் கணவனைப் பாதுகாப்பான். ஆதலால் இவனுடைய உயிரைத் தந்து என் உயிரை வாங்கிக் கொள்," என்று வேண்ட]

முதுமூ தாட்டி இரங்கினள் மொழிவோள்.

[அதைக்கேட்ட சம்பாபதி மிகவும் இரக்கங்கொண்டு பின்வருமாறு கூறினுள்.]

" ஐய முண்டோ வாருயிற் போனுற்
செய்வினை மருங்கிற் சென்றபிறப் பெய்துதல்
ஆங்கது கொணர்ந்தவின் னுரிடர் நீக்குதல்
ஈங்கெனக் காவதொன் றன்றுநீ யிரங்கல்
கொலையற மாமெனுங் கொடுந்தொழில் மாக்கள்

அவலப் படிற்றுரை யாங்கது மடவாய்
உலக மன்னவர்க் குயிர்க்குயி ரீவோ
ரிலரோ விந்த வீமப் புறங்காட்
டரசர்க் கமைந்தன வாயிரங் கோட்டம்
நிரயக் கொடுமொழி நீயொழி.............."

["நீங்கிய உயிரானது செய்த கருமத்திற் கேற்றவாறு சென்று மறுபிறப்பு எடுக்கும் என்பதற்குச் சந்தேகம் இல்லை. ஆதலால், அவ்வுயிரை இப்பொழுது கொண்டுவந்து தந்த உன் பெரிய துயரத்தைத் தீர்க்க என்னால் ஆகாது. நீ வருந்தாதே. கொலைசெய்வதும் தர்மமாகும் என்று சொல்கின்ற தீயசனங்களின் கேடுடைய பொய்யுரையாகும் அது. மற்று, மாதே உன்னுயிருக்கு மாருக இவனுயிரைத் தரச் சொல்கின்றனே. அது இயலாது. இயலுமாயின், உலகத்தைக் காக்கும் மன்னர்களது உயிருக்குப் பதிலாய்ச் சனங்கள் தங்கள் உயிரைக்கொடுத்து அவனை எக்காலும் சாகாதபடி வைத்திருக்க முன் வருபவர் இல்லாமற் போயினரோ? இந்த நன்காட்டிடையே ஆயிரம் ஆயிரமாய் அரசர்க்கெழுப்பிய கோட்டங்கள் (Kings' tombs) அமைந்திருக்கின்றன. எனவே நரகத்திற்கு ஏதுவான இவ்வார்த்தையை நீ விட்டுவிடு].

அரசரும் இறந்து போகின்றனர் என்பதைச் சம்பாபதி எடுத்துக் காட்டியவுடன் கோதமைக்குத் தன்னுயிர் தந்து இவனுயிர் பெறுதல் இயலா தென்பது ஐயமின்றி நிச்சயமாயிற்று. "உலக மன்னர்க்கு உயிர்க்கு உயிர் ஈவார் இலரோ" என்ற சம்பாபதியின்கேள்வி எளிதிலே மறுக்கற் பாலதன்று. மன்னனின்னுயிரிற்கு மாருகத் தன்னுயிரைத் தருவார் எண்ணிறந்தோர் உளர். ஆயினும் அரசனும் இறப்பனென்ருல் அவ்வுயிர் மாற்றல் இயலாதாற்ருன். வேந்தனை மாந்தர் யாருந் தத்தம் உடலென்று மதித்திருப்பதால், தம்முயிர் அவ்வுடலில் புகுந்துகொள்வதால் அவர்களுக்குப் பேதமொன்றும் தோன்றிடாது. இது இயலுமாயின் பின் தமதிறைவனுக்கு எந்நாளும் இறுதி என்பதில்லை.

அரசியற் படலத்தின் ஈற்றுச் செய்யுள் உலகத்தையேனும் மற்றெக்கருமத்தையேனும் போற்றுவார் மறக்கலாகாவோர் வாய்மையை மாற்றுதற்கியலா உவமையொன்ருல் விளக்குகின்றது. பொதுஜன பரிபாலனம் புரிவதில் முயல்வோர் பத்தோ டொன்ருய் யாரையும் பாராட்டிப்பேசும் பான்மையை ஒழித்துத் தயரதனின் கொள்கையைக் கையாள்வது நலமாம். கூறுவர் கம்பர்,

எய்யென வெழுபகை யெங்கு மின்மையால்
மெய்பொரு திளவுறு முழவுத் தோளினன்
வையக முழுவதும் வறிஞ னோம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசு செய்கின்ருன்.

[படையெழுந்து எதிர்க்கும் பகைவர் எங்குமில்லாததால், போர்செய்யத் தினவுகொண்ட மத்தளம் போன்ற தோள்களையுடைய தயாதன், பூவுலகம் முழுவதும், தரித்திரன் ஒருவன் தன் சிறு வயலைப் பாதுகாக்கின்ற விதமாய், அரசு செய்பவனுயினன்]

வறிஞன் தனது சிறு வயலில் ஒவ்வொரு பயிராய்ப் பார்த்து வளர்ப்பதுபோல் தயாதன் வையகத்து மாந்தரையும் மற்றுள உயிர்களையும் கூட்டிக் கருதாமல் ஒவ்வொருவரையும் தன்தனிச் செல்வமாகப் பாவித்து அவைகளுள் ஒன்று குறையினும் தன் வறுமைக்காகாதென நினைத்தனன்.

T. N. சேஷாசலம்.

வானசாஸ்திரம்

சூரியன்.

சூரியனிலிருந்து வரும் ஒளியையும் காங்கையையும் பற்றி இதுவரையிற் சொல்லிவந்தோம். இனி, அதன் தன்மையையும் அமைப்பையும் பற்றிக் கவனிப்போம்.

சூரியனிலிருந்து வரும் ஒளி மிகவும் பிரகாசமாயிருக்கிறபடியால் தூரதிருஷ்டியின் மூலமாயும் சாதாரண வேளைகளில் நாம் அதைப்பார்த்து அதன்தன்மையையாவது அதன் அமைப்பையாவது தெரிந்துகொள்வது மிகவும் கடினமான ஒருகாரியம். சூரியனுடைய ஒளியை மங்கச்செய்தால் அல்லது சூரியனை முற்றிலு மறைக்க முடியுமானல் தூரதிருஷ்டியின் மூலமாய்ச் சூரியனைப் பற்றிய எத்தனையோ விஷயங்களை அறிந்துகொள்ள முடியும் அவ்விதம் செய்வது மனிதனுடைய வல்லமைக்குள் அடங்கியதல்ல. ஆனல் இயற்கையிலேயே இவ்விதம் சூரியனை மறைத்துச் சூரியனைச் சுற்றிகடக்கும் சம்பவங்களை நாம் தெரிந்துகொள்ளத் துணைசெய்யும் பொருள் ஒன்று உண்டு. இது சந்திரன். சந்திரன் சூரியனைப் பார்க்கிலும் எவ்வளவோ மடங்கு சிறியதாயிருந்தபோதிலும் சூரியன், சந்திரன் நிற்கும் தூரத்தைவிட 400-மடங்கு அதிக தூரத்தில் நிற்கிறபடியால் இரண்டும் ஏறக்குறைய ஒரே அளவாய் நமது கண்ணுக்குத் தோன்றுகின்றன. இவ்விதம் இரண்டும் ஒரே அளவாயிருப்பதனல் சந்திரன், பூமிக்கும் சூரியனுக்குமிடையில் வந்தால் சில சமயங்களிற் சூரியனை முழுவதும் மறைத்துவிடுகிறது. இதற்குப் பூரணசூரியகிரகணம் என்றுபெயர். கிரகணங்களைப் பற்றிப் பின்னுற் சொல்லுவோம். இவ்விதமான பூரண சூரிய கிரகணம் சம்பவிக்கும்போது சூரியன் முற்றிலும் சந்திரனல்மறைக்கப்படுகிறது. இந்த சமயத்தைவானசாஸ்திரிகள் எதிர்பார்த்துத் தூரதிருஷ்டியின்மூலமாய்ச் சூரியனைப்பரிசோதித்து வருகிருர்கள். தூரதிருஷ்டி கண்டுபிடிக்கப்பட்ட ஆரம்ப காலங்களில் ஐரோப்பாக் கண்டத்தில் பூரண சூரிய கிரகணங்கள் வெகு சிலவே சம்பவித்தன. ஆகவே சூரியனை நன்ருய்ப் பரிசோதனை பண்ணுவதற்கு முடியாமலிருந்தது. நாளடைவில் வெளிதேசப் பிரயாணம் செய்வது சாதாரணமாய் ஏற்பட்டதன்பின் வானசாஸ்திரிகள் கிரகணம் தோன்றும் இடங்களையும் நேரத்தையும் சரியாய்க் கணித்து அந்த விடங்களுக்கே பரிசோதனைக்கு வேண்டிய கருவிகளுடன் சென்று கிரகணத்தை மிக ஆவலோடும் எதிர்பார்த்துத் தாம் தெரிய வேண்டியவைகளை எல்லாம் தெரிந்துகொள்ளப் பார்க்கிருர்கள். சில சமயங்களில் இவர்கள் படுகிற கஷ்டங்கள் எல்லாம் வீணுய்ப் போவதுமுண்டு. ஆகாயம் மேகம்மூடி ஒன்றும் தெரியாதுமறைந்துவிட்டால் போனவர்கள் திரும்பி ஊருக்கு வறிதாகத் திரும்பவேண்டி நேர்கின்றது. இவ்விதம் வீண்போகா திருந்தற் பொருட்டுக் கிரகணம் தெரியும் இடத்தில் மூன்று நாலு பாகங்களில் வெவ்வேறு கூட்டத்தார் தங்கள் தங்கள் பரிசோதனை ஸ்தலங்களை ஏற்படுத்திக் கொள்வது வழக்கம். தற்காலம் ஒவ்வொரு தேசத்திலும் இருந்து பூரண சூரியகிரகணம் சம்பவிக்கும் இடத்துக்கு வானசாஸ்திரிகளின் கூட்டங்கள் செல்லுகின்றன. மேலும் இவ்விதம் பரிசோதனை

பண்ணுவதற்கு இவர்களுக்குக் கிடைக்கும் காலமும் மிகவும் சொற்பமே. சூரியன் பூரணமாகச் சந்திரனல் மறைபட்டிருக்கக் கூடிய நீண்டகாலம் எட்டே நிமிஷம் தான். சாதாரணமாக இரண்டு அல்லது மூன்று நிமிஷம் வரையில்தான் சூரியன் மறைந்திருக்கும். இச்சொற்ப காலத்துக்குள் எத்தனையோ விஷயங்களைக் கவனிக்க வேண்டி யிருக்கிறது. இதற்காகக் கிரகண நாளுக்கு அனேக நாட்கள் முன்தொடங்கி எவரெவர் என்ன என்ன கவனிக்கவேண்டு மென்பதைப்பற்றிப் பழக்கப் படுகிருர்கள். தற்காலம் சூரியகிரகணம் எந்தவிடத்தில் சம்பவித்தாலும் ஒன்ருவது தப்பவிடாமல் வானசாஸ்திரிகள் கவனித்து வருகிருர்கள். பூரண சூரியகிரகணம் இயற்கையில் உண்டாகாதிருக்குமாயின் தற்காலம் நமக்குச் சூரியனைப்பற்றி எட்டியிருக்கும் அறிவில் அதிகமான பாகம் கிடைத்திருக்காது.

சூரியன் மிகப் பிரமாண்டமான ஒரு எரிகோளம் என்பது யாவரு மறிந்த விஷயம். அதன் குறுக்களவு 8,66 540 மைல். இந்தப் பெரிய அண்டம் பூமியைப்போல இறுகியிருக்கிறதா அல்லவா வென்பதைப் பற்றிச் சரியான முடிவு ஒன்றும் ஏற்படவில்லை. ஆனல் அது உருகிய நிலைமையில் இருக்கிறதென்பது கொள்கை. உருகிய நிலைமையில் இருப்பதனல் சூரியனுடைய ஒவ்வொரு பாகமும் ஒரே இடத்தில் இராமல் கீழும் மேலும் அங்குமிங்குமாகத் திரிந்து கலங்கிக் கொண்டிருக்கிறது. சில சமயங்களில் சிலபாகங்கள் தடித்து இறுகி உட்செல்ல இவ்விடங்களை மற்றப்பாகங்கள் வந்து மூடிக்கொள்கின்றன. சூரியன் சுழற்சியுடைய தென்பதும் எல்லாராலும் ஒப்புகொள்ளப் பட்டிருக்கிறது. ஆனல் சூரியனுடைய மத்தியரேகை இருபுறமிருக்கும் பாகங்கள் அதிவேகமாயும் அதற்கப்பாலிருக்கும் பாகங்கள் சற்றுக் குறைந்த வேகத்துடனும் சுழல்கின்றன வென்றும் சொல்லுகிருர்கள். சூரியன் உருகிய நிலையி லிருப்பதே இதற்குக் காரணமாக விருக்கலாம்.

வெறுங் கட்புலனலும் சாதாரண வேளைகளில் தூரதிருஷ்டி மூலமாயும் நமக்குத்தோற்றுவது சூரியனுடைய காங்கையும் ஒளியும் உற்பத்தியாகும் பாகமே. இதைத்தவிர வேறுஒன்றும் நமக்குத் தோன்றுவதில்லை.

இந்தப் பாகத்திற்கு ஒளிகோளம் (Photosphere) என்று பெயர். இதற்குமேல் பூமியை எவ்விதம் வாயுப் படலம் மூடியிருக்கிறதோ அதே மாதிரிச் சூரியனையும் வாயுப் படலங்களும் ஆவிப்படலங்களும் மூடியிருக்கின்றன. இவை பூமியின் வாயுப் படலத்தைப்போல ஒரே தன்மையாயிராமல் வெவ்வேறு தனிப்படலங்களா யிருக்கின்றன. சூரியனுக்குமேல் அனேகமாயிர மைல் தூரம் இப்படலங்கள் பரவியிருக்கின்றன. முக்கியமாய் இப்படலத்தின் தன்மைகளைத்தான் நாம் கிரகணகாலங்களிற் தெரிந்துகொள்ளத் தக்கதா யிருக்கிறது. இவற்றைப்பற்றிப் பின்னல் சொல்லுவோம்.

நல்ல தூரதிருஷ்டியின் மூலமாக இவ்வொளி கோளத்தைக் கவனித்துப் பார்த்தால் அரிசி பரவியிருக்கிற மாதிரி தோற்றுகிறது. இந்த அரிசிபோலத் தோற்றுவன சூரியனின் உட்பாகத்திலிருந்து வெளிவரும் மிக அதிக சூடான அணுக்களாயிருக்கலா மென்றும், இவைகளுக்கிடையில் கருநிறமாய்த் தோற்றுவன சூடு இழந்த அணுக்கள் மறுபடியும் சூரியனுடைய உட்பாகத்துக்குட்செல்வனவாயிருக்கலாமென்றும் எண்ணுகிருர்கள்.

இவைகளைவிட சூரியனுடைய மேற்பரப்பில் சூரிய மறுக்கள் (Sun's Spots) என்று சொல்லப்படும் கரிய மறுக்கள் காணப்படுகின்றன. இவைகள் தோன்றி அழிந்துபோகின்றன. சில மறுக்கள் சில நாட்டுகளுள் மறைந்துவிடுகின்றன. சிற்சில ஒரு மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வரையிலும் இருக்கின்றன. இந்த மறுக்கள் ஒவ்வொன்றும் நடுவில் மிகவும் கறுத்தும் இதைச் சுற்றிச் சற்றுக் குறைந்த கருமையும் உள்ளனவாயிருக்கின்றன. கறுத்திருக்கும் நடுப்பாகம் பார்ப்பதற்கு ஒரு குழிபோலத் தோற்றும். ஆனல் அது குழிதானு அல்லவா வென்பது இன்னும் நிச்சயமாய் ஸ்தாபிக்கப்படவில்லை இந்த மறுக்கள் ஒவ்வொன்றும் அனேக வாயிர மைல்கள் நீளமுள்ளன. ஒரு பெரிய மறுவில் பூமியைப் போன்ற அனேக அண்டங்கள் அடங்கும். சூரிய மறுக்கள் பொதுவாய்க் கூட்டங்களாய்த் தோற்றுகிறது. தனிமையாய் உண்டாவது மிக அபூர்வம். சில சமயங்களில் இந்த மறுக்கள் சூரியனுடைய மேற்பரப்பில் நூற்றில் ஒரு பாகத்தை மூடியிருக்கும். மறுக்கள் தோன்றி வெகு சீக்கிரத்தில் மிகப் பெரியதாய் வளர்ந்து மறுபடியும் விரைவாய் மறைந்துபோகின்றன. இந்த மாதிரி மறுக்கள் தோன்றி மறைவது சில காலங்களில் அதிகமாயும் சில காலங்களில் மிகக் குறைவாயு மிருக்கிறது. இதைச் சோதனை செய்ததில் இவ்விதம் பெருகியும் குறைந்தும் மறுக்கள் காணப்படுவது கிரமமாய் ஒவ்வொரு 11½ வருஷங்களுக் கொருமுறை என்று ஏற்படுகிறது. இந்த 11½ வருஷத்துக்குச் சூரிய மறுக்காலச் சக்காம் (Sun Spots Cycle) என்று பெயர். சூரிய மறுக்கள் நமது பார்வையிலிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கின்றன. இதைக் கொண்டுதான் சூரியன் சுழற்சியுடையதென்பது தெரியவந்தது. சூரியன் சுழற்சி உடையதென்பதற்கு வேறு ஆதாரங்களும் உண்டு. இதைப்பற்றி முன் சொல்லியிருக்கிறேரும்.

திருவள்ளுவர் நூல் நயம்

R. P. சேதுப் பிள்ளை B.A., B.L.,
அவர்கள் எழுதியது

திருவள்ளுவர் பெருமை, திருக்குறள் - பொது நூல், அறத்தின் குற்றம், அரசியல் முறை, இன்ப இயல், திருக்குறள் உவமைத்திறம், திருவள்ளுவரும் பரிமேலழகரும் எனும் ஏழு அத்தியாயங்கள் கொண்டவோர் சிறந்த புத்தகம்.

திருக்குறளைக் கற்று ஆய்ந்தவரும் கற்க விரும்புவரும் இருவருக்கும் இப்புத்தகம் அளவிறந்த இன்பமும் பயனும் அளிக்கும். தெளிந்த நடையில் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கியுள்ளன.

விலை { கலிகோ கில்ட் கட்டடம் ரூ. 1 8 0
சாதாரணம் „ 1 0 0 } வி. பி. சார்ஜ் வேறு.

மானேஜர், கலாநிலயம், வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

ஏமாங்கதத்

இளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச் சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being. The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "KALANILAYAM" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்

சமஸ்புரியில் சுத்தி:—அலிகார் ஜில்லாவைச் சேர்ந்த சமஸ்புரியில் 130 முகமதியர்கள் இந்து மதத்தைத் தழுவினார்கள் என்று இந்து மஹாசபைக் காரியதரிசி அறிவிக்கிறார். இன்னும் சில தினங்களில் மற்றொரு சுத்தி நடக்கும் என்று தெரிகிறது.

***

ஆப்கன்ருஷிய ஒப்பந்தம்:—ஆப்கன் அமீர் ருஷியாவில் சுற்றுப் பிரயாணம் செய்ததின் பயனாக, ஆப்கானிஸ்தானமும், ருஷியாவும் வர்த்தக சம்பந்தம் வைத்துக் கொள்வதென்று ஒப்பந்தம் ஒன்று ஏற்படுமென்று ஒரு அயல் நாட்டுச் செய்தி கூறுகிறது.

***

கல்கத்தா காங்கிரஸ்:—வருகிற டிசம்பரில் கல்கத்தாவில் கூட வேண்டிய காங்கிரஸிற்கு ஸ்ரீமான் சென்குப்தா, வரவேற்புச் சபையில் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார் என்றும் அவரும் அப்பதவியை ஏற்று காங்கிரஸ் வரவேற்பு சபைவேலையைத் துவக்கியுள்ளார் என்றும் தெரிகிறது.

***

முனிசிபல் தேர்தல்:—வருகிற முனிசிபல்தேர்தலில், தோழர் சிங்காரவேலு செட்டியார் மைலாப்பூர் டிவிஷனில் நிற்கப் போவதாக அறிவித்துள்ளார். ஸ்ரீமான் ஆர். வரதராஜுலு என்பவர் யானைகவுனி டிவிஷனில் தொழிற் கட்சியின் சார்பாக நிற்கப் போவதாகத் தெரிகிறது.

***

இந்துமதப் பிரசாரம்:—இந்தூர் மஹாராஜாவும், அவரது ஐரோப்பியமனைவி ஸ்ரீமதி சர்மஷ்டிதேவியும், அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து இந்து மதப் பிரசாரம் செய்யப் போவதாகவும், பலரை இந்துவாகச் செய்யப் போவதாகவும் ஸ்ரீமதி சர்மஷ்டி தேவி பாரிஸில் பத்திரிகை நிருபரிடம் கூறியுள்ளார்.

***

ரங்கூனில் புயல்:—சென்ற ஞாயிற்றுக்கிழமை ரங்கூனில் பெரும்புயல் ஒன்று அடிக்க அதிகச் சேதம் விளைந்தது. அநேக வீடுகளின்மேற் கூரைகள் விழுந்து விட்டன. அநேகர் காணப்படாமற் போய்விட்டார்கள். இதனால் விளைந்த நஷ்டம் எவ்வளவு என்பது இன்னும் தெரியவில்லை.

***

சர்வகட்சி மகாநாடு:—இந்தமாதம் 19ம் தேதி பம்பாயில் சர்வகட்சி மஹாநாடுகூடும். இதற்குச்சென்னையிலிருந்து டாக்டர் பெசண்ட், A. ரங்கசாமி ஐயங்கார் C. விஜயராகவாசாரியார், O. கந்தசாமி செட்டியார் P. V. சதாசிவம் முதலியோர் போவதற்கு இருக்கிறார்கள். A. ராமசாமி முதலியார் போவதுபற்றி இன்னும் தெரியவில்லை.

***

ஸ்ரீமான் திருமலைப் பிள்ளை காலமானார்:—இம் மாதம் 15-ந் தேதி அன்று ஸ்ரீமான் திருமலைப் பிள்ளை இறந்துபோனார். சென்ற இரண்டுமாதங்களாக நோயால் அவர் வருந்திவந்தார் என்று தெரிகிறது. பிள்ளை அவர்கள் 1866-ம் வருஷம் பிறந்தவர். கல்லூரிப் படிப்பு முடிந்து 1892-ம் வருஷம் சொலிஸிட்டராய் அமர்ந்தார். 15 வருஷகாலம் அவர் நகரசபையில் அங்கத்தினராய் இருந்துள்ளார். 1923-24—இல் அவர் நகரசபைத் தலைவர் பதவியைப் பெற்றார்.

தாகூரின் ஐரோப்பியப் பிரயாணம்:—ஐரோப்பியப் பிரயாணத்தை ஒட்டிச் சென்றவாரம் சென்னைவந்த டாக்டர் ரவீந்திர நாத்டாகூர் தேகசுக மின்மையால், ஒரு மாதகாலவரை மைசூரிலுள்ள நந்திமலையிலாவது, உதகமண்டலத்திலாவது தங்குவதாகக் கருதியுள்ளார் என்று தெரிகிறது. ஜூன் மாதக் கடைசியில் தான் டாகூர் ஐரோப்பியப் பிரயாணத்திற்கெனக் கப்பலேறுவாராம்.

***

ஜப்பான் சீனச்சண்டை:—வெகுநாட்களாகவே ஜப்பானுக்கும் சீனாவுக்கும் மனத்தாங்கலிருந்துவந்தது, எதிர்பார்த்தபடி அது போரில் முடிந்தது. ஸினான்பூ (Tsinanfu) என்னுமிடத்தில் ஜப்பானியப் படையும் சீனப்படையும் கைகலந்து யுத்தம்செய்தது. இப்போரில் சீனருக்கு உயிர்ச்சேதம் அதிகம் என்றும் தெரிகிறது. இச்சண்டையில் 150 சீன வீரர்கள் உயிர்துறந்தார்கள் என்றும் 7000 பேர் சரணடைந்தனர் என்றும் ஒருதந்திச்செய்தி கூறுகிறது. இச்சண்டையால் இரங்கூனிலும் சண்டை ஏற்பட்டுள்ளது, 14ந் தேதியன்று இரங்கூனிலுள்ள சீனர்களும், ஜப்பானியர்களும் தெருவில் கோரமான போர்செய்தனரென்றும் இதைத் தடுக்கவேண்டி போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டி நேர்ந்ததென்றும் தெரிகிறது. சீனமஹாஜனங்கள் ஸர்வதேச சங்கத்திற்கு (League of Nations) இதில் தலையிட்டு ஒரு முடிவைச் செய்யவேண்டி மனுச்செய்து கொண்டுள்ளார்களாம்.

***

எல்லைப் புறத்தில் யுத்த ஏற்பாடு:—காபூல் செய்தி கூறுவதாவது:—பிரிட்டிஷார் ஆப்கன் எல்லைப்புறத்தில் ராணுவங்களைப் பலப்படுத்தியும், பல கோட்டைகளைக் கட்டியும் வருகின்றனர். டில்லியிலிருந்தும், லாகூரிலிருந்தும் இதுவரை 60000-பேர் ராணுவத்தில் சேர்க்கப்பட்டு பெலுசிஸ்தானத்திற்கும் வாஸிர்ஸ்தானுக்கும் அனுப்பப் பட்டுள்ளனர். வாஸிர்ஸ்தானத்து ராணுவக் கோட்டை 12000-பேரைக் கொள்ளக் கூடியதாகத் திருத்தியமைக்கப் பட்டுள்ளது. ஆகாயவிமானங்களும் வந்து கொண்டிருக்கின்றன. ஆகாயவிமானஸ்தலம் ஒன்றும் எல்லைப்புறத்தில் கட்டப் படுகிறது. பிரிட்டிஷார் செய்யும் இவ்வேற்பாடுகள் ஆப்கன் பொதுஜனங்களினிடம் பயத்தை உண்டாக்கியுள்ளன. ருஷிய ஆப்கானிய வியாபார சம்பந்தம் ஏற்படாது செய்வதற்கென இம்முயற்சியோ! என்று ஆப்கானிய ஜனங்கள் ஐயுறுகின்றனர்.

***

பர்டோலி சத்தியாக்கிரஹம்:—பர்தோலியில் சனங்கள் சத்தியாக்கிரஹத்தை எவ்வளவு ஊக்கமாக நடத்தி வருகிறார்களோ அவ்வளவு ஊக்கத்துடன் அதிகாரிகள் அடக்கு முறைகளைக் கையாண்டு சனங்களிடம் பீதியை உண்டாக்க முயன்று வருகிறார்கள் என்று சத்தியாக்கிரஹ சபைக்காரியதரிசி ஒரு அறிக்கையில் கூறுகிறார். பர்தோலியில் இவ்வியக்கத்தை நடத்திவைக்கவந்த சூரத்து காங்கிரஸ் கமிட்டிக் காரிய தரிசியான ஸ்ரீமான் சேனாய் என்பவர், சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் வேலைக்கு இடையூறுசெய்தார் என்ற குற்றம் சாட்டப்பட்டு இ. பி. கோ 186-வது செக்ஷன்படி 2 மாதங் கடுங்காவல் தண்டனையும் 25 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டார். கிராம உத்தியோகஸ்தர்களிடம் வேலைபார்க்கும் வெட்டிகளை வேலைநிறுத்தம் செய்யுமாறு தூண்டியதாக அவர்மீது மற்றொருகுற்றமும் சாட்டப்பட்டது. இக்குற்றத்திற்காக ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இத்தண்டனையை அறிந்த பர்தோலி ஜனங்கள் உடனே வேலைநிறுத்தம் செய்தனர். இதுவரை ஜனங்கள் அமைதியுடன் சத்தியாக்கிரஹத்தை நடத்தி வருவதாகத் தெரிகிறது. இரவிலும், பகலிலும் நடுச்சாமத்திலும் பறிமுதலும், ஜப்தியும் நடத்தப்படுகின்றன. எனினும் ஜனங்கள் ஆத்திரங்கொள்ளாதும், பீதியடையாதும் உறுதியாய் இருந்துவருகின்றனர். காந்தியடிகள், சத்தியாக்கிரஹ இயக்கத்திற்கு எல்லோரும் பண உதவி செய்யவேண்டுமென்றும், இவ்வியக்கம் வெற்றி பெறும் வகையில் இந்தியர் வேண்டுவன செய்யவேண்டுமென்றும் 'யங்இந்தியா' பத்திரிகையில் எழுதியுள்ளார்.

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

Dr. Orison Swett Marden's World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for; To succeed in your chosen calling; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers—Diverted by salary—Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little thing—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence—Health-building during sleep—Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease—Killing emotions—Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master—Trifles—Courage—Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement—The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

Special Indian Edition Rupee 1-8-0 each

V. KALYANARAM IYER & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)